ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமத்வேதாந்தபரமதாவேஜா:

பரமபாகவதோத்தமராகிய

# ஸ்ரீமத்பாலபாரதி சுவாமிகள்

அருளிச்செய்த

# இராமாயணத்திருப்புகழ்

என்கிற

# இராமசயம்.

துறையூர்

முத்துவீரம்பிள்ளையவர்கள் குமாரர், உபா

கோவிந்தப்பிள்ளையா

பரிசோதனைசெய்து

பூலாம்பாடிகிராமத்தில்

எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீமான்

தேவராஜரெட்டியார் ஸ்வாமிகள்

ஸந்நிதியிலும், தம்மிடத்தும் காலக்ஷேபம் செய்துவருகிறவராகிய

மாராடிகிராமம்

மகா-ா-ா-ஸ்ரீ முத்துவீரமரெட்டியார் அவர்கள் குமாரர்

கிருஷ்ணசாமிரெட்டியாராலும்

சேவந்தாம்பட்டி

மகா-ா-ா-ஸ்ரீ நல்லப்பரெட்டியார் அவர்கள் குமாரர்

பெருமாள்ரெட்டியாராலும்

செய்த பொருளுதவியால்

திருச்சிறாப்பள்ளி,

சௌத் இந்தியா டைம்ஸ் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதி ௫௲ ௯௨.

REGISTERED COPY-RIGHT.

ஸ்ரீராமஜயம்.

திருநயம் பிரம்மஸ்ரீ

## அ. நரசிம்ம பாரதிகள்

இயற்றிய சாற்றுகவிகள்.

---

### அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

பொன்னுடைமருங்குயர்த்தமாமுடிக்கன்றியெதும்புந்திகோடாத்
தொன்னுமெஞ்சற்குணத்தினடியார்கள்சிலர்வேண்டத்தோங்கலைந்து
மின்னுடுங்கலைநுசுப்பின்வைதேகிமணவாளன்விளைத்தகாதை
முன்னுமெம்பதுமாரன்வாலபாரதியென்னுமுழுவலோனும் (௧)

இதுவுமது.

தமிழளிக்குந்தமிழ்நான்குசொல்வகுப்பாமிராமசயமென்றுசாற்று
மிமிழ்திரைவைப்பினர்சொலிராமாயணத்தின்றிருப்புகழையார்க்கும்வாக்குக்
கமிழ்தினெளிதினிலினிக்கும்படிபடிக்கவுயிரெழுத்தினமைத்தானன்னோன்
உமிழ்மணியார்கலியண்ணப்பெருமான்றுட்குள்ளத்தினுழுவலானேன் (௨)

இதுவுமது.

பார்த்தவடகலையொடுதென்கலையிலுயர்வடகலையிற்பக்கந்தாங்கி
மாத்துறைசைப்பதிதோன்றியிலக்கியவிலக்கணங்கள்வாய்த்தகற்புப்
பூத்துயர்வேளாளர்குலக்கதிராகித்தூப்புறப்பிள்ளைப்போதன்பாதம்
வைத்துறுநல்லொழுக்கோவாக்கோவிந்தபிள்ளையெனுமியல்வல்லோனே (௩)

---

ஸ்ரீராமஜயம்,

தேவிகோட்டை பிரம்மஸ்ரீ

## சுப்பிரமணிய ஐயர் அவர்கள்

இயற்றிய சாற்றுகவி.

---

### அறுசீரடி ஆசாரியவிருத்தம்

எந்தைகையபெருநூலுமிந்தனிநூற்பெயர்முதற்கணெழுதப்பெற்றே
இத்தலத்தினிலவியுறுமெனச்சொலுமிராமசயமென்றநூலை
நத்துறைசைப்பதிமருவிவளர்கோவிந்தப்பெயரோனயந்தாய்ந்தச்சின்
மெத்துசுவைத்தமிழ்ப்புலவர்கண்டுவக்கப்பதிப்பித்துவிரித்திட்டானே (௧)

---

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

வளவனூருக்கடுத்த பள்ளிகொண்டான்புரம்

வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

## மா. வேங்கடகிருஷ்ணப்பிள்ளை அவர்கள்

இயற்றிய சாத்துகவி.

---

### நேரிசையாசிரியப்பா.

பூவிரிபொலந்துணர்பொதுளியகற்பகக்
கோவிரீஇயட்பறைகொட்டுதலொழிதர
விரிச்சிகளுறைதியர்மீச்சென்மார்க்கந்
தரித்திகலோகந்தன்னை விளக்க.
அரம்பையரந்தணரங்கனையார்கள்
வரம்பெறுகிரீவமங்கலமிலங்க
கருபக்களிற்றின்கரீரம்வளர
நகுபக்கயிலைநடுக்கமொழிதர.
ஐயிருவையத்தாழியான்மிதுலை
வையக்கோக்கொருமருமானாகி
இராவணவிராவணனிராவணமறுத்த
அராவணையமலனாதியெம்பெருமான்.
இராமாயணமென்றியம்புகாவியத்தைப்
பராவுறுபுகழ்சேர்பாலபாரதியார்
சந்தத்திருப்புகழ்சாற்றினரதனை
இந்தவுலகத்தியாவரும்பொறித்த.
கரவுமுநீக்கிக்கருதுமச்சேற்றிப்
பரவுபகாரம்பண்ணினனெவனெனிற்
றுளாண்மையினிற்றவராச்சோழிய
வேளாண்மரபின்மேவியவரவோன்.
நறையூர்பொழில்விண்ணகரளவோங்குந்
துறையூரகலாதுதொல்குடியாளன்
உயர்வறவுயர்ந்தவொருவற்பரனென
மயர்வறவுணர்ந்தவைணவநன்மணி.
தத்துவீரைக்குட்டண்ணமுதம்மென
முத்துவீரற்கோர்முளையெனவுதித்தோன்
ஒல்காப்புகழ்செறிதொல்காப்பியமொடு
பல்காப்பியமறிபண்பறிவாளன்.
மாலடியாரைமாலெனப்போற்று
மாலொழியாதமாலினையுடையோன்
மாவிந்தையாளனென்னுங்
கோவிந்தநாமங்கொண்டபாவலனே. (க)

முற்றிற்று.

---

ஸ்ரீராமமயம்.

# துறையூர் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ நாகலிங்கம் பிள்ளை அவர்கள் இயற்றிய சாத்துகவிகள்.

---

## அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

பூமணக்கும் பொழிலின்மிடைந்த நிலமகட்கோர்
திலகமெனப் பொலிசோணாட்டிற்
பாமணக்கும் புலவருள மகிழ்சிறப்பப்
பல்வளத்தாற் பாடல் சான்ற
நாமணக்கும் புகழ்த்துறையூ ருறைதருவே
ளாண்குலத்தோர் நயத்தல் செய்யத்
தாமணக்குஞ் சுகுணநிறை முத்துவீரம்
பிள்ளைச் சுதனாய்த் தோன்றி. (க)

ஓதரிய வுபயவேதாந் தவிசிட்
டாத்துவிதி யுலகு போற்று
நாதமுனி திருமரபி லவதரித்த
குருமூர்த்தி நலஞ்சேர் விண்ணோர்
மேதினியோர் பூலோக வைகுண்ட
மெனத்திரண்டு விருப்பிற் போற்றுந்
தீதையொழி காவிரிசூழ் திருவரங்கப்
பெரும்பதியிற் றிகழ்ந்து வாழ்வோன் (உ)

மூதற்றிருமா ளிகையுபய சிங்காச
னாதிபதி முகுந்தன் மந்த்ரம்
உதிப்பகற்று மெனவறியாத் திறத்தருக்கும்
பக்குவஞ்செய் துபதேசிப்போன்
நிதிக்குவையைப் பாகவத சிரோமணிகட்
கீந்தன்பு நிறுத்தா நின்றோன்
துதித்திடுசீர் சீனிவாச ரங்கநாதா
சாரிய சுவாமி பொற்றாள். (ங)

வழிபாடு நன்கியற்றி யாங்கவன்பாற்
சங்காழி வரையப் பெற்றுப்
பழிபாடி லாததிரு மந்திரமுஞ்
செவிக்கமுதாய்ப் பகரக் கேட்டுக்
கழியாத பேரன்புந் திருமஞ்சி
சூரணமுங் கலனாக் கைக்கொண்
டொழியாத பத்துவநா ராயணனே
யெனத்துணிந்த வுரனும் பூண்டு. (ச)

மாவிந்த வெற்படக்குங் குறுமுனிதேர்
தமிழ்க்கடலை வாரி யுண்ட
கோவிந்த பிள்ளையெனக் குலவுபெயர்
புனைந்தொழுகுங் குணக்குன் றன்னோன்
ஏவுந்தி யரக்கர்குல வேரறுத்த
விராமபிராற் கியைந்த காதை
தீவந்த பவப்பிணியைப் பாற்றுறுமென் றரு
மறைகள் செப்பல் கேளா. (௫)

கராமலையக் கைக்களிற்றைக் காத்தருள்கூர்
கண்ணபிரான் கழற்கா லன்பு
விராவியசீர் பாலபார திகள்சந்த
விருத்தத்தால் விரிக்க வெண்ணிப்
பராவியவன் மீகிகம்பன் சொற்றபெருங்
காப்பியங்கள் பல்கா லாய்ந்து
தராதலத்தி னீடுவிரா மாயணப்பேர்த்
திருப்புகழாய்ச் சாற்றி னோரால். (௬

அத்தகைய நூலதனை யியலறியா
மாந்தர்சில ரறிவுக் கேற்பச்
சுத்தமுறு பாடமிகத் திடவேட்டின்
வரைந்துநலந் தொலைத்த வாற்றைச்
சித்தமிசை பெரிதுணர்ந்து வதன்பயன்க
ளெவர்க்கும்வருந் திறனை யுன்னிப்
பத்தியுட னத்துகளை மாற்றியினி
தளித்தபெரும் பனுவ றன்னை. (௭

வில்லுமிழு மணிமாட நெருங்குமெழின்
மாராடி விரும்பி வாழ்வோன்
தொல்லுலகி லிசைநிறுத்து முத்துவீர
மக்குரிசி றோன்ற லானோன்
மல்லலம்பூ லாம்பாடி தேவராயப்
பாகவத வள்ள றன்பாற்
சொல்லலுறு சிதசித்தீச்சு ரவியனூ
லனைத்துநனி தோய்ந்த நாவான். (௮)

மணியேறுதிருமறுமார் புடையபிரா
னடியவர்க்கே வழிபா டாற்றுந்
துணிபேறு சிந்தையனு முன்புகன்ற
கோவிந்தத் தூயோன் பாங்கர்
அணியேறு மிலக்கியமு மிலக்கணமுங்
கசடறக்கற் றுயர்ந்த நல்லோன்
குணியேறு பண்டகுல விளக்கனையான்
கிருஷ்ணப்பேர் கோமான் றானும் (௯)

நீரகஞ்சேர் பனையன்னம் வாழ்செவந்தாட்
பட்டியென நிகழ்த்து மூரிற்
போரகஞ்சே ரினிதுவதி தருநல்ல
பூபனருள் பெருஞ்சீர் மைந்தன்

தாரகஞ்சேர் வைணவச்செந் நெறியொழுகும்
பண்டகுலத் தலைமை வாய்ந்தோன்
ஏரகஞ்சேர் கோவிந்த பிள்ளையின்பாற்
கல்விபயின் றிடுமாண் புள்ளான் (௰)

இரவலர்க்கு வரையாது கொடுத்துவருஞ்
செல்வத்தா லிசைவ லானன்
பொருவரிய பெருமாண ரேந்த்ரனென
வெத்திசையும் புகழ்வோன் றானும்
பெருமைமிகு தந்தமக்கு வியன்றபொரு
ளுபகரித்துப் பிறங்க யார்க்கும்
வளாவரிய விகிதத்தா லச்சிட்டுப்
பயிலுறுமா வழங்கி னரால். (௰க)

**முற்றிற்று.**

௨

## துறையூர் ஸ்ரீநந்திகேஸ்வரஸ்வாமி கோவில் கணக்கு வித்வான்
## மகா-ள-ள-ஸ்ரீ விஸ்வநாதபிள்ளை அவர்கள்
## இயற்றியது.

---

**சாத்துகவிகள்.**

செங்கதிர்மண்டலம்வாழ்வுறுதிர்வறுமாசையருமையின்
சங்கொடுசக்கரம்வாள்கதைசார்ங்கமென்னுமிவ்வைம்படை
யங்கையின்வைத்தநாராயணனலரியிறைண்மரபிற்பினும்
திங்களுரிஞ்சுநறும்பொழில்சேருமயோத்திவளம்பதி. (க)
வந்துபிறந்தாசாட்சியின்மன்னியமாக்கதைச்சாகரம்
நந்தம்பாலபாரதிப்பெயர்நான்மறையாளனெனும்புயல்
சிந்துமழைத்துளியெனவுஞ்செப்பியசந்தமெனுங்கவி
யுந்தியிராமாயணத்திருப்புகழ்ப்பெயரோடுமொழுகுமால். (உ)
வரைதுநர்வழுவொடுவைகியமற்றதெலார்க்குமுள்ளவா
றுரைபெறநன்குதிருத்துபுவுதவினனெந்திரவெழுத்தெனும்
புரையறுமச்சினிலியற்றியேழும்பொழில்புடைசூழ்துறைசைப்பதி
கரையில்புகழ்முத்துவீரவேள்காதலன்வைணவநெறியுளான். (௩)
சீரியல்வேளாளர்குலஞ்செய்தவத்தின்பயனானோன்
கூரியவுணர்ச்சியினாற்கொழுந்தமிழின்கரைகாண்பான்
ஏரியலுமந்நகரினிருந்துமிகுபுகழ்பரப்பும்
பேரியலுநாகலிங்கநாவலர்கோன்பெரிதன்பால் (௪)
இயனூலைனியுணர்த்தவுணர்ந்ததற்பினெழிற்றஞ்ச
மயனூலைத்தம்மரபிற்காசிரியர்பாற்பயின்றும்
அயனூலின்பொருண்மிகவுமாராய்ந்துமளவில்பெரும்
பயன்மேவுங்கோவிந்தபிள்ளையெனும்பாவல்லோன் (௫)
சீராமன்றளியமைத்திடத்தந்தசெழுநதிசூழ்
மாராடியுறைகிருஷ்ணசாமியெனுமகிபனொடு
சீராளன்செவந்தைநகர்சேர்ந்துறையும்பெருமாளென்
பேராளன்செழும்பொருட்பேருதவிசெய்யப்பெற்றன்றே (௬)

௨

தாழம்பாடி மகா-ா-ா-ஸ்ரீ அப்பாசாமி பிள்ளையவர்கள் குமாரர்

## வரதநஞ்சயக்கவிஞர் இயற்றிய சாற்றுகவிகள்.

### கட்டளைக்கலிப்பா திரிபு.

சீல பாரதி சானன வச்சிரச் செங்க ராமழு வீறுகொண்முத்தலைச்
சூல பாரதி னுங்களுக் கின்னல்செய் துட்ட ராவண னாதிய ராவியைக்
கால பாரதி கம்முண்டென் நீயுமென் கைவிலென்றுகொள் காகுத்தன்
பால பாரதி சந்தவி ருந்தத்தாற் பண்ணினு னற்கும் பன்மலை [காதையைப்
[யேறவே (௧)

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

முற்பாதிபத்திர சத்தேன்பிலிற்றக்கம்பனதுமுதுநூல்வண்ணம்
பிற்பாதிகவிகளைதசொற்றிடுநயமுங்கண்டெழுத்துப்பிறழ்ச்சிபோக்கிப்
பொற்பாதிபொருந்தநிரீஇயச்சேற்றினனையபுலவன்கோட்டு
வெற்பாதிமூலமெனுமுனமருளாரணனடியார்விரும்புஞ்சீலன் (௨)
வேதாந்ததேசிகர்சித்தாந்தவழிகடைப்பிடித்தவிழுமியோனவ்
வேதாந்தபரத்துவங்கார்வண்ணனெனும்வைணவத்துவேட்கைமிக்கான்
போதார்ந்தமதுவளர்க்கச்செந்நெலடர்பணைத்துறைசைப்புரிவாழ்தாமத்
தாதார்ந்தபுயமுத்துவீரமகீபதிபுரிந்ததவத்தால்வந்தோன் (௩)
பாவிந்தப்படிகூறலரிதெனக்கற்றவர்சிரக்கம்பஞ்செய்யுஞ்செந்
நாவிந்தமலையடக்குமொருமுனிநாணுறத்தமிழ்தேர்கல்லோன்மாதர்
தூவிந்தனலைக்குளிர்வித்தருடியெனமயல்கொள்ளத்துலங்குபொற்பான்
கோவிந்தநாவலனென்னண்பனம்மாவுலகுவக்குங்குணத்தினனே (௪)

ஸ்ரீ

வளவனூருக்கடுத்த பள்ளிகொண்டான்புரம் வித்துவான்
மகா-ா-ாஸ்ரீ வேங்கடகிருஷ்ணப்பிள்ளையவர்கள் மாணாக்கர்

## ஸ்ரீமான் சடகோபப்பிள்ளையவர்கள்

இயற்றிய

### நிலமண்டிலவாசிரியப்பா

அல்லிசூழ்வாவிவில்லிபுத்தூரில்
தொல்லைநால்வேதத்தொழுகுலவிளக்காம்
சீலமார்வித்வசிகாமணியான
பாலபாரதியெனப்பயன்பெயர்பெற்றோன்
அராவணையமலனாதியஞ்சோதி
இராமதாரகனுக்கியம்புகாவியத்தை
நித்தியவின்பநிலம்பெறவேண்டிப்
பத்தியவண்ணப்பாவினிற்சொற்றான்
அன்னநன்னூலிவ்வகனிலமதனில
மன்னுங்கரவழுமற்றதுநீக்கி
இன்னியவச்சிலேற்றினனல்லோன்
பொன்னியறுறையூர்நன்னகரகலா
முத்துவீரற்கான்முளையெனவுதித்த
சத்தியஞானவித்தகநீரன்
வியன்வேளாளர்மேதகுகுலத்துப்
புயல்கோவிந்தப்புலவரேறே (௧)

ஸ்ரீராமஜெயம்

# முகவுரை

---

இந்நூலின்திருநாமம் சிலவிடங்களில் "இராமாயணத்திருப்புகழ்" என்றும், சிலவிடங்களில் "இராமசயம்" என்றும் வழங்கிவருகின்றது. ஸ்ரீமன்நாராயணனும், ஸ்ரீவாசுதேவனும், ஸ்ரீயப்பதியுமாகிய ஸ்ரீராமதாரகப்பரப்பிரம்மத்திற்குப் பெருமையிற் சிறந்தோனென்று பொருள்படும் "பெருமாள்" என்னுந்தனிமொழி அசாதாரணத்திருநாமமாய் நிற்றலினால் அவ்விறைவன் புகழேதிருப்புகழெனத்திகழ்கின்றது. எத்தகைய வைதிகநூலின்கண்ணும் பிரதமத்தில் அன்புடனெழுதப்படுவது இந்நூலின் இராமசயம் என்கிற மற்றைய திருநாமமாயிராநின்றது. இந்நூலாசிரியர் வரலாறு. இந்நூலினீற்றில் சில பிரதிகளிற் காணப்படும் "வேலைநீடிய" என்னும் செய்யுளில் "பாலபாரதி ராமசயத்தமிழ்" எனக்கூறியுள்ளமையானும், சிலர் இந்நூலைப்பாலபாரதி ராமாயணமென்று வழங்கிவருதலினாலும், ஸ்ரீராமநாடகத்தின் முகவுரையில் ஸ்ரீ அருணாசலக்கவிராயர் சரித்திரத்தில் ஸ்ரீமத்ராமாயணத்தை ஸ்ரீமத் கம்பநாடர் விருத்தப்பாக்களாலும் ஸ்ரீமத்பாலபாரதியார் சந்தப்பாக்களாலும் அருளிச்செய்தமையால் ஷை கவிராயர் கீர்த்தனாரூபமாகச் செய்தருளினாரென்றிருக்கின்றமையானும், இன்னும் சில வேதுக்களானும் இந்நூலாசிரியர் ஸ்ரீமத்பாலபாரதிசுவாமிகள் என்பது இனிது சித்தித்தது. இவர் இராமரென்னுந்திருநாமமும் உள்ளவரென்றும், ஸ்ரீவில்லிபுத்தூராரென்றும், இந்நூலைத்தேவேந்திரனது சபையில் அரங்கேற்றினாரென்றும் சிலர் கூறுவதற்கு விசேஷித்த பிரமாணங்கள் கிடைக்கவில்லை. இச்சரித்திரம் நன்குணர்ந்தோர் அறிவித்தருள்வராயின் மறுபதிப்பிற் சேர்ப்பிக்கப்படும். இந்நூலின் பத்திமையையும், பொருட்செறிவையும், சந்த வின்பத்தையும் நோக்குவோர்க்கு ஆசிரியர் மகிமை தோன்றாநிற்கும்.

முசிரிதாலுகா துறையூர் மு. உபாத்தியாயர்

**கோவிந்தப்பிள்ளை.**

ஸ்ரீ

ஸ்ரீராமபரப்ரஹ்மணேநம:

## த னி ய ன் க ள்.

---

காலன் குறுகான் கடியவினை போயொழியும்
மாலின் றிருவருளும் வாய்க்குமறை—நாலுணரும்
நம்பால பாரதியார் நன்களித்த ராமசயம்
இன்பார வோதுபவர்க் கீங்கு (க)

வெண்டா மரையாளும் வேணவா வோடருள்வள்
தண்டா மரைத்திருவுந் தானருள்வள்—கொண்டாடி
ஆராதனமேற்றி யன்பளைந்து ராமசயம்
ஆரா தனம்புரிவார்க் காங்கு (உ)

இராமசய மென்றொருகா லெண்ணுவார் மாண்பார்
இராமசய மென்றே யிசைப்பார்—இராமசயம்
என்னுமொலி கேட்பா ரிறைவைகுந் தம்பெறுவார்
என்னுந் தொல் வேதத் தினம் (௩)

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகர் திருவடிகளே சரணம்

---



ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமத் வேதாந்த பரமகுருவே நம:

ஹரி:ஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை.

# இராமசயம்.

# பாலகாண்டம்.

---

## பாயிரம்.

### காப்பு—சந்தவிருத்தம்.

பணிமேலேபடுத்தவனைத் தனுவேதானெடுத்தவனைப் பகைசே
ர்தாடகைக்கு முதற்கணையேவிப், பகையாதேதுணித்தவனைத் திரு
வோடேமணத்தவனைப் பரதாழ்வானிருக்கவனத் திடையேபோய்க்,
கணையாலேகுரக்கரசைப் பொருசீராயணைக்கடலைக் கடவாநீளரக்க
ர்குலக் கிளைமாளக், களமீதேயறுத்தவனைப் பரிவோடேதுதிக்கமு
ழுக் கவிஞானோதயத்தெளிவைத் தரவேணும், துணைவாகாசினிப்
புலவர்க் கரசேசீதளப்பொருநைத் துறையாளாவெதிர்ச்சமயக் கு
லகாலா, தொழுவார்தீவினைச்சிகரிக் கிடியேறேமணக்குமகிழ்த்
தொண்டமாறுதடுத்திடுமுட் பகையாறும், தணிவோனேயருட்கட
லுட்டு ளேவோனேசகத்துணர்வைத் தருவோனேசெழித்தமறைப்
பொருள்சேரத், தமிழோராயிரத்திலமைத் திடுவோனேயெடுத்தபு
கழ்ச் சடகோபாதிருக்குருகைப் பெருமாளே. (க)

பாரதிநெஞ்சாலுணர்ந்து மேல்வருமென்றேதெளிந்து பாடி நன்காதைபண்டை மொழிவேதம், பார்பகருந்தூயமந்த்ரம் நோ முழுதுந்தீர்மருந்து பாலமுதந்தேனைதிர்ந்து வினையீர்வா, னீர ல்வெம்பாறைநெஞ்சு நேருருகும்பாடலண்ட ரீசனயன்பேணுமி ப் மறவாதோ, யாதுநினைந்தாலுமந்த வாழ்வுதருந்த்யாகசிந்தி ரா சயம்பாடவந்து துணையாவாய், வாரிகடந்தேகிவஞ்சி யாருயி பொன்றுதுகண்டு மாநகரஞ்சூறைகொண்டு களமீதே, வானின் ருந்தேகொணர்ந்து வீரர்மபங்காவிதந்து மாவிருதிண்டோள்விள க வமராடிச், சேரன்மடிந்தேகவன்று தேவிபதஞ்சூடி நின்று சே பனமுங்கூறிவந்து சுடுதீமுன், சூழ்பரதன்காணமுந்தி யாவிபுர தேயுகந்து தூதனெனும்பேர்புனைந்த பெருமாளே. (உ

கோழையானவர்மிகுத்த வீரமேபுகலுகிறபர் கோதுசேரிழி லத்தர் குலமேன்மை, கூறியேநடுவிருப்பர் சோறிடார்தருமபுத் கோவுநானெனவுரைப்பர் மிடியூடே, யாழுவார்சிறியுடைக்கு பே ஞனெனவிசைப்ப ராசசேர்கலியுகத்து நெறியீதே, யாயுநூலடை வுகெட்ட நானும்வேறலவவர்க்கு ளாகையாலவையடக்க முறையே னே, யேழைவானவர்பிழைக்க யானைவாசவனடத்த வீழமேல்வ யிலெறிக்க மதிவேணி, யீசனுர்தனதிடுக்கண் மாறியேகயிலைவெ பிலேறியேயினிதிருக்க விருநாலு, வேழமானவையினைட்டு நாலு கோடுகண்டுமளக்க வேதவீடணனொருத்தன் முடிசூட, வீரரா ணனுடற்குண் மூழ்கியேகழுகுகொத்த வீறுசேர்சிலையெடுத்த பெ ருமாளே. (௩

பாயிரமுற்றிற்று.

## நூல்.

உலகமொருமூன்றுமொண்பெற்றதத்துவமு மகரமுதல்சான் றவைம்பத்தொரக்கரமு முரியமறைநான்குமந்தத்துநற்பொருளு பு யிர்யாவு, முருவுநடைவாய்ந்துமண்பற்றிநிற்பனவு மகமுமகமேட் ந்தவண்டத்தினிற்புறமு மொளியிலொளிபோன்றவின்பத்தினிற்சுட ரு மறிவாகி, யிலகுமொருபூன்றமென்றுற்றமெய்ச்சொருப நிலை

யைவெளிதோன்றலும்பெற்றிருட்பகலு மிலதொர்நெறிபூண்டநின்ப
ற்பபொற்சரண மகலாதே, யிறுதியறவாழ்ந்துநண்பர்க்குளொத்து
ருகி யடிமைமலபரண்டதொந்தத்தைவிட்டொழிய விதயவிருள்வா
ங்கியென்றைக்ருபைக்கணரு டருவாயோ, மலருமலரேந்தியண்டத்
துநக்கனய னமரர்கிளைசூழ்ந்துவந்திக்க†நக்கமலை மருமமிசையோ
ங்கவந்தக்கடற்றிடரின் முகில்போலே, வடிவினெழிறோன்ற*வுந்தி
க்கவுத்துவமு மினிபிரபைகான்றுவிஞ்சத்திருத்துளவ மருவவொரு
காந்திநண்புற்றிடப்பெரிய கரமீதே, நிலவுதருகாந்திசங்கத்தினிற்
பிறழ வெயிலையழகார்ந்தசெஞ்சக்ரமுற்றுமிழ நிகரில்கதைசார்ங்க
மொண்கட்கமெய்ப்படையு முடன்வாழ, நிரைகொளுலகீன்றவுந்தி
த்திருக்கமல மலரவடிசேர்ந்துகங்கைத்திருப்பொலிய நெடியதொ
ருபாம்பினின்பத்திருக்கண்வளர் பெருமாளே. (க)

† நக்கமலையென்பதில் நகரம் சிறப்புப்பொருளில் வந்தது.

* உந்தி—சமுத்திரம்.

கொழுந்தசைநிணத்துடனெலும்பு நரம்புகுடர்சுக்கிலமலங்க
ள் குறும்புனலிரத்தமொடமைந்து முடைநாறுங், குரம்பையைநம
க்குநிலையென்று தனம்பலகுவித்துநிறைபெண்கள் கொடுங்கையில
ணைக்கமகிழ்சிந்தை யொருகால, முழுந்துருள்கணப்பொழுதுநின்று
தரங்கமறவுட்பகைகளைந்து னுடன்படுமெனிற்புவியடங்க வரசாளு,
மொடுங்கலில்சிறப்பினிதுதந்து பெரும்பதமளித்திடுவையென்று
வுணர்ந்துமுணர்வற்றுநரகின்கண் விழுவேனோ, செழுந்தருணபற்
பபதிநஞ்ச மருந்தியவுருத்திரனுமண்டர் திருந்துகுலிசத்தனொட
ங்க வனைவோருஞ், செறிந்திடுமரக்கர்பொரநொந்து நெடுங்கனகவெ
ற்பின்மிசைவந்து தெளிந்துகமலப்பதநினைந்து க்ருபையாளா, வழி
ந்தனமிளைத்தனமனங்கொ டிரங்குனதடைக்கலமுகுந்த வனந்தலை
யினித்தவிர்கவென்று துதிபோதி, னடைந்திடுதிருத்துயிலொழிந்
து நெடுங்கடலிடைப்பிரபைசிந்த வனந்தசயனத்தினிலெழுந்த பெ
ருமாளே. (உ)

மடுவிலேகரிக்குமுந்திவந்து நெடியதூணினைப்பிளந்துநின்று
மருவுபாரனைத்துமண்டரண்ட வகையாவு, மதுரவாய்மடுத்தடங்க
வுண்டு பெரியநாபியிற்பரிந்துதந்து வருசராசரத்துளும்புறம்புமக
லாநீ, யடியேனினைக்கவுங்குணங்கள் பரவியேதுதிக்கவுந்தெளிந்து

னடிதொழாவழைக்கவும்பரந்து திரியாதே, வறிவிலேசெலுத்தவு
கலந்தே னளவுபோலவொத்துநின்றதஞ்ச மதனைநானுரைத்திடு
தரங்க ளெனலாமோ, நெடியவேலைவிட்டெழுந்துசங்கு திகிரிப
ணியிற்றுலங்கவெங்கு நிகரிலாதபற்பமங்கைதுங்க மணிமார்ப,
றையவேநிறத்தகொண்டன்மண்டி வருவபோலெழுச்சிகொண்டு
ங்க ளினைவைநாமுடிப்பமென்றெதிர்ந்த வெழில்காணக், கடவுளெ
க்குருபைத்தடங்கணெங்க ளிறைவனேயிரட்சியென்றுவந்து கனகமே
ருவுச்சிநின்றெழுந்து சிவனுடக், கமலயோனிபொற்கணம்புசிந்த வட
ரர்பூவிறைத்திறைஞ்சவன்று கருடவாகனத்தில்வந்திழிந்த பெரு
மானே.
(கூ)

அகப்பொருண்மார்க்கமுணர்ந்து புறப்பொருள்பார்த்துமதங்கள
டுத்ததொல்காப்பியபஞ்ச வதிகார, மனைத்திலுநாக்களழுந்தி படி
த்திடுநாற்கவியின்சொ லழுக்கறுபாட்டுடனின்று புகல்வோருன்,
மகத்துவமேத்தினரந்த நெறித்தமிழ்கேட்டுமியன்ற வழக்கமிலாக்
கவிகொண்டு தமியேனும், வழுத்துகைதோத்திரமென்று பொறுத்
தருணீக்குதலின்றி மகப்பெறுவார்க்கவர்புன்சொ லிதமாமே, மிகு
த்தவிராக்கதர்தங்கள் கனத்தபராக்ரமமின்று விரித்திடலார்க்குவச
ந்தண் மதிபானு, வெளிப்படுகாட்சியொழிந்து டகத்தினையாற்றல
ழிந்து மிடித்தது நூற்றுறையெங்கு நெறிகோடிச், செகத்திறைமா
ட்சிகுலைந்த தெமக்கினிமூச்சிலையெங்கள் சிறைத்தலைமீட்டருளென்
று முடிதாழச், சிறப்புறுநாற்றலைமைந்த னுரைத்திடுவார்த்தைக
ளன்று திருச்செவிசாத்தியிருந்த பெருமானே. (ச)

முனையழிந்ததுபூர்த்திகுலைந்தது வயதுசென்றதுவாய்ப்பல்வி
ழுந்தது முதுகுவெஞ்சிலைகாட்டிவளைந்தது ப்ரபைதானு, முகமிழ
ந்ததுநோக்கமிருண்டது விருமல்வந்ததுதூக்கமிகுந்தது மொழித
ளர்ந்ததுநாக்குளறுந்தொறு மறிவேபோய், நினைவயர்ந்ததுநீட்டன்
முடங்கலு மவசமும்பலவேக்கமுமுந்தின நெறிமயங்கினழுப்புமு
திர்த்து பலநோயு, நிறையநின்றதுபாய்க்கிடைகொண்டது சல
மலங்களினூற்றமெழுந்தது நிமிடமிங்கினியாச்செனுமன்றுமுன் வ
ருவாயே, இனியெழுந்திருமாத்திரளண்டர்*கள் கவியுமெண்குமெ
ஞுச்சொருபங்கொளு மினியகுன்றொருடிகாட்டிலடைந்திடு நிரையார்
தோ, விருபதும்ப்ரபைகாட்டுநெடுந்தலை யொருபதுந்துகளாக்கிவ

ணங்கல ரெவரையுந்தனியாக்கினையிடும்படி யினிமேல்யான், மனுவரம்பதுகாத்துநிறம்பெறு திகிரிசங்கமுமாற்றலனந்தனு மருவுதம்பியராய்த்தொழுநந்தச ரதனூர்தம், மதலையென்றுநலேற்றமிகுந்துள மனிதனென்றுமயோத்தியிடந்தனில் வருவனென்றொருவார்த்தைவழங்கிய பெருமாளே. (௫)

* அண்டர்கள்—விளிவேற்றுமை.

கமலமுற்றவளுலகுபெற்றவ டிருவுரத்திடைகுடியிருப்பவள் கைபடைத்தவளழகுமிக்கவ ணெடுவேலை, கடையுமப்பொழுதிலுதித்தவள் புனிதலட்சுமியொருதினத்திடை கழல்செறித்திடுதிருவடித்தொழு திறையோனே, நிமலநிட்களப்ரிய முனக்குளதெவரிடத்திலிலெனவுரைத்தலு நிறைவிருப்புடனிசைபுலப்படு கவிபாடு, நிபுணர்சொற்களிலெனவுரைத்தனை யதனையுட்கொடுகவியுரைக்கினு நினதுபொற்றிருவடி துதிப்பது தவிரேனே, சமிதைபத்திரைமிகுதருப்பைகள் பசுவிருத்தொடுவிபுதர்மெய்த்தவர் சருமநற்றுகிலுரலுலக்கை கணடுயூபஞ், சருவரைத்திடுசிலையுருக்குநெ யரணிநற்றொடு *கயிறுநற்பரி சகடைமற்றுளகலமனைத்தொடு முறையாலே, யமரர்பெற்றிடவவிகொடுத்தொரு வருடமிப்படிகலைமுகத்தவ னணிமகத்திடைதயரதப்பெயர் மகராச, னரியமுற்றழல்வளரவுத்தமநெறிநடத்தலுமவனிடத்தினி லவதரித்திடவெனநினைத்தருள் பெருமாளே. (௬)

* பயறுநெற்பொரியென்றும் பாடம்.

பாதித்ரியம்பகனுந்தி நான்முகனம்புயமங்கை பாகமிகுந்த்வுரங்கண் மதிபானு, பாதநெடும்புவிகங்கை வேதமியம்புவதுன்சுபாவமுணர்ந்திடலெந்த வகையேயாம், யாதுமுன்வஞ்சவுடம்புவேறிலையிங்கொருசிந்தை யாவைவிளம்பிலுமன்பு தவிராதே, யாரைவணங்கிலுநம்பி னுரையிணங்கிலுநெஞ்சி லாரைநினைந்திடினங்கு நினதாமே, யோதுமிரண்டறுதிங்கள் வேள்விநடந்தபின்வந்தொ ரூனமில்பிண்டம்வழங்கி யொருபூத, மோடிமறைந்திடமைந்தர்ப் பேறினியுண்டெனநெஞ்ச மோகையுறுந்தவனம்பொ னடிசூடிக், கோதறுபிண்டம்வகிர்ந்து தேவியரொன்றொடிரண்டு கோதையருண்டிடுமென்று முறையாலே, கோமகனன்றுவழங்க மாதவமுன்புபுரிந்த கோசலைபங்கொடுசென்ற பெருமாளே. (௭)

மாலையைமுடித்துவிளங்கு சேலையையுடுத்திநிறைந்த வாண்மு கமினுக்கிநெருங்கு முலைமீதே, மாமணிநிரைத்துமுயங்கு தோளையசைத்துநடந்து வாள்பொருகடைக்கணெறிந்து தெருவூடே சாலுமிளைஞர்க்குமிகுந்த வாதைவருவித்திடுபெண்க டாமிடுதுவகிலமுந்தி யயர்வேனைத், தாமதகுணத்திலுமந்த ராசதகுணத்திலுமுந்து சாதுகுணநிட்டையிலென்று விடுவாயே, யாலிலைகிடக்கைதணந்து வேலையினிருக்கைதிறம்பி யாதவனிடத்திலுமின்றி யமேச, ஞமரசிருப்புமுனிந்து மாகயிலைவெற்பொடுகஞ்ச மாதியிடமுறுமகன்று கரைகாணுக், கோலமறையுச்சிதுறந்து மாதவர்மனத்தைநெகிழ்ந்து கோகனகைசொர்க்கமிகந்து வளர்பாயற், கோளரவைவிட்டுவிகங்க பூபதிகழுத்தைமறந்து கோசலைவயிற்றிலிருந்த பெருமாளே. (௮

* கருவடைந்துபத்துற்றதிங்கள் வயதிருந்துமுற்றிப்பெயர்து கடையில்வந்துதித்துக்குழந்தை வடிவாகிக், கழுவியங்கெடுத்துச்சுரந்த முலையருந்திவிக்கக்கிடந்து கதறியங்கைகொட்டித்தவழ்ந்து நடையாடி, யரைவடங்கள்கட்டிச்சதங்கை யிடுகுதம்பைபொற்சுட்டிதண்டை யவையணிந்துமுற்றிக்கிளர்ந்து வயதேறி, யரியபெண்களைப்பற்றிநொந்து பிணியுழன்றுசுற்றித்திரிந்த தமையவுன்கருணைபச்சித்தமென்று பெறுவேனோ, விரவியிந்த்ரன்வெற்றிக்குரங்கினரசனென்றுமெய்ப்பற்பவுந்தி யிறைவனெண்கினக்கர்த்தனென்றுநெடுநீல, னெரியனென்றுமைப்பற்றுகண்ட னனுமனென்றுமொட்பற்றவண்ட ரெவருமிந்தவர்க்கத்தில்வந்து வனமேவத், தரையிடம்டிக்கச்சுமந்த திருவனந்தனுக்ரப்ரசண்ட தவளசங்குசக்ரத்தொடன்று பிரியாதே, தனியுடம்பெடுத்துத்தயங்கு மிளைஞரென்றுசுற்றத்துலங்கு தயரதன்றவத்திற்பிறந்த பெருமாளே. (௯)

*அருணகிரியார்த் திருப்புகழிலுள்ளவிப்பாடல் கடையடிதவிர மற்றையவடிகளிந் நூலுக்குப்பொருத்தமாயிருந்தமையா லிந்நூலாசிரிய ரிப்பாடலையெடுத்தாண்டனர், திருப்பாதிரிப்புலியூர் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ. சிவசிதம்பரமுதலியாரவர்களைக்கொண்டு பரிசோதிக்கச்செய்து, திருத்தரைப்பூண்டி தாலூகா முனிசீபு மகா-ா-ா-ஸ்ரீ. சுப்பிரமணியப்பிள்ளையவர்களச்சிற் பதிப்பித்திருக்கிற (௬௧௩) பாட்டுக்களுள்ள அருணகிரியார்த்திருப்புகழில், எரியதென்றும் ருத்ரர்சிறந்த அனுமனென்றும்

"என்றுள்ளது, இதனைக்கருவடைந்து" என்னும் பாட்டிற்காண்க. இ
ன்னுமிருவர், எரியனும் மருத்துச்சிறந்த வனுமனென்றும். என்றும்,
எரியதென்று மருத்திற்சிறந்தவனுமனென்றும், "என்றும் திருத்
தி யச்சிற்பதிப்பித்திருக்கின்றார்கள். இத்திருத்தலை இவ்விருவருஞ்
சந்தச்சிதைவென்பதை நோக்கலர்போலும், ஏட்டுப்பிரதியில் மைப்பற்
றுகண்டனுமனென்றும்" என்றுள்ளது.

நளிகடல்பூதமெடுத்ததிக்கொடு வரைகள்சுராசுரர்பற்பன்முக்
கண னடவுசராசரமுற்றுமற்றுன திருரூப, நணுகிவிசாரமுரைத்
துநித்தமு நுணுகியகேள்விபடைத்துமப்படி நவில்வதுதூரமெனக்
குறித்துனை மதுசூதன், றுளவணிமாலரிகிட்டணனச்சுதன் மறைமு
தல்கேசவனத்ரிவிக்ரம சொருபன்முராரிப்ரசித்தன்விட்டுணுமண்ம
கள்கேள்வன், சுரிவளையாழியன்பத்தரட்சகன் மரகதமாயனென
திருத்திய துதியுறுபேர்பலவிட்டழைத்திடு மெனையாள்வாய், இளை
யகைகேசிவயிற்றிலுத்தம பரதகுமாரனுதித்தநட்புட னிணைபிரியா
தசுமித்திரைப்பெயர் மடமாதி, னிருவிழிபோலவிலக்குவப்பெய ர
றிவுடையார்னொடுசத்துருக்கின னிருவர்களாகியுதித்தவித்திற மொ
ருமூவர், கிளரிளையார்கள்சிறப்புறத்தச ரதநரபாலனுமிக்கபுத்திரர்
கெழுமியநால்வரெனக்கனத்தபொன் மழைவீச, க்ரகநிலைநாள்கண்
முகூர்த்தமொப்பற வருபுனர்பூசதினத்தின்முற்படு கிளிமொழிகோ
சலைபெற்றெடுத்தருள் பெருமாளே. (௰)

படாப்ரவாளவலங்கிர்தபூடண கராத்ரிரூபசுகந்தமனோகர ப
ராக்ரமாதுலதுங்கபயோதர மடவார்தம், பராக்கிலேதிரியுங்குண
கீனன்மெ யுறுத்துரோகியிடும்பன்வியாகுலி படாத்துராக்ருத
தொாங்கமெலாமுறு கொடியேன்யான், கடாக்கடாவிவருஞ்சமனார்
பொரு பிராத்தியாயுயிர்நின்றுவெரீவரு கனுப்ரகாரமெனும்படிபோ
வதன் முனமேநீ, கராத்தன்வாயறவந்ததுபோலவென் விடாய்க்குமே
வெளிநின்றுக்ருபாகர கடாட்சமானதுதந்துபரோகதி யருள்வாயே,
நடாத்துமேவியசஞ்சலனேசக வியாத்தியானபரஞ்சுடரேசெமு ந
ருத்துழாயணிவெம்பெருமாவடி வுடையோனே, நமோத்துநாரண
வென்றிமையோர்தொழ வுலாத்துமோர்கருடன்புயமேறிமு னகார்ப்
ரவாசம்விடுஞ்சிவனான்முகன் முதலோரே, யடாப்ரவாகவிலங்கை
யின்மீதுள விராக்கதாதியர்கொண்டுளநீள்வர மயோக்யவாழ்வொட

டங்கலுநீறெழ நரனாகி, யராக்குலாவியபொங்கணைபாழ்பட விடாட்
பயோததியும்பொலிவேயற வயோத்திமாநகரந்தனின்மேவிய பெரு
மாளே. (௰க)

வீழுடம்புதானெடுத்துநின்ற மானுடங்களாமிறைச்சியெங்கு
மேலெழுந்தவாசையிச்சையொன்றி வருகோலின், மீதடைந்துகோ
வையற்றபின்பு கோபவங்கிமீதிலிட்டுவெந்த மேனிகண்டுவாய்மடுத்
தருந்து மொருகாலன், பாழிலிந்தநீள்பிறப்பில்வந்து லாபமொன்
றுமேயிலைத்திரிந்து பாதகங்களைபடைத்துவெம்பி யுழல்வேனை,
பாரதொந்தமாய்கையைக்கடந்து ஞானசிந்தையாலனைத்தும்வென்
று பாதசெஞ்சரோருகத்திலென்று புகுவேனே, வாழுமுண்டகாச
னத்தன்மைந்த னாறிரண்டுநாளிலிற்புகன்றவாய்மைகொண்டுநீர்விடு
த்துமஞ்ச னமதாடி, மாலைதண்டையாழ்பொற்சதங்கை காரைசங்
குநாணெடுத்தணிந்து மார்புகண்கைகான்மினுக்கியண்ட மொடுபூமி,
யேழுமுண்டவாய்விளக்கியெங்கள் கோசலன்குமாரிமுற்பயந்த ரா
ணியன்பொடேகொடுக்கநெஞ்சு களிகூர, ராசவஞ்சமேருவொத்தத
ந்தை யாகமொன்றவேபணைத்திருந்து ராமனென்றுபேரிடக்கிடந்த
பெருமாளே. (கஉ)

வேலியடையாப்பயிர்நெடுங்கரையற்றபுன லுய்முலைபெருச்சி
றுகுழந்தைதருக்குமிள வேனிலடையாக்குயிலரும்புயலற்றமயி ல
ரசாளும், வீரனையிலாப்புவிமதங்கயமற்றபடை கால்விசைபெருக்க
லமரும்பொறைகெட்டதவ வேதமறுபூச்சுரனருங்கல்வியற்றவவை
பலநூலின், சீலமுணராக்கவிமடந்தையையற்றமனை நாணமறு
கோற்றொடிவிருந்துவிலக்குகுடி சேர்பொருளிலாக்குறைபிறந்தநல
த்திளமை கதிராளி, தேசுமருவாக்கமலமிங்கிவையொத்துமுழு ஞா
னமறுமாக்கையொடுழன்றவெனக்குமறை தேடுமிருதாட்டுணைவழ
ங்கினைப்பதுவு மொருநாளே, பாலொடுநெய்கூட்டியொருசங்குநி
றைத்து மணிவாயிலினிதூட்டிவிரல்கொண்டுதெறிக்கழுது பாகு
படுதேக்கொடுகடைந்துகுடித்தவுடன் முறையாலே, பால்வளையை
நீட்டிமுடிநின்றுசுழற்றியது பூமிமிசைமூக்குறமருங்குகவிழ்த்துவிரி
பாணிகொடுமீட்டுமுடலங்கமுலுக்கியிரு தொடைமேற்கொண்,
டேலமுறுநீர்க்கொடுகுடைந்துதுடைத்துமண மேவுபொடிபோட்டு

மெய்திமிர்ந்துலைப்பொர்டியி னேறுமொருகாப்பினிதணிந்துயர்தேர்ட்டிலுள் வளர்வாயென், றேடுசெறிசேக்கையிலுகந்துகிடத்திநனி கோசலைபராக்கறவிருந்துவளர்க்குமபி ராமகமலாட்சரகுநந்தனநற் பெரிய பெருமாளே. (௧௩)

மகப்பியேதானுவேண்டி தருமணியேமேகமேயென மகிமைகளேகூறிநீள்கவி வலராஞேர், வருபொழுதேனேனெனுநகை முகமுடனேயோடிவாருமின் மனமதுநாணுதுகேளுமி னெனவோதித், தகைபெறவேவீசுமேலவர் ப்ரியமொடுகொணுதுவாழ்வறு சதிரிலியாய்லோபியாய்மிடி யனுமாகித், தளர்வுறுமாபாவியாகிய வெனையடியாரோடுமேதகு தலைமையிலுலாளுநாளினி யொருநாளே, முகிலினைநேரானமேனியும் வளைநிகரோரானக்ரீவமு முறுவலுமாவேததாலுவு மணிவாயு, முகமுமிராசீவலோசன யுகளமுநீணுமரேகையு முடிபுனைபாலோலமாலையு மிருகாது, மகலியபூணுரமார்பமு மிகலியவாசானுவாகுவு மபிநவவாரீசநாபியு மரைஞாணு, மதிவிதபாதாதிகேசமு மிளமையும்லீலாவிநோதமு மழகியராமாபராபர பெருமாளே. (௧௪)

தாதையெனுமுந்துவித்திணையொரு தாய்வயிறெனுந்தனிப்புலமிசை தாழ்வறமுயன்றுவித்தியுமது பயிராகச், சார்வினைகளென்றுமுற்பெருகிய நீரினைவளைந்துகட்டியுநெடி தாய்மிகவளர்ந்துமுற்றியுமது விளைவாறுற், றாதரொடுவெந்தறுத்துவலிய பாசமதுகொண்டிழுத்தொழிவறு தூரமனைசென்றுபுக்கெரிவிழி முதுகாலன், சோபனமுடன்புசித்திடும்வகை யாகியபெரும்பிறப்பறவொளிர் தூயபதபங்கயத்தொருதின மடைவேனோ, பாதமிசைதண்டையொப்பனைசெய்து மேதகுசதங்கைகட்டியுமறை பாடுமொருகிண்கிணித்திருவரையதுசேரப், பாணிகிரிசங்குறப்புலியுகிர் தாழ்வடமுரம்பொருத்தியுமிருபாரகுழைகுண்டலப்ரபையெழ முடிமீதிற், கோதைமலர்கொண்டைசுற்றியுநுத ஞமமொடுசிந்துரத்திலகம கோலியுமிலங்குசுட்டியுமதி னடுஞாலக், கூரெழின்முகந்திருத்தியுமுடை யாடையைவிசிந்துநீத்தியுமொரு கோசலையலங்கரித்திடவளர் பெருமாளே. (௧௫)

வேதனைமுற்றும்பெருகிய மாயவுடற்பைங்குளமிசை வீசுவலைத்திண்கயிறுகொ டுயிராகு, மீனடையப்புண்படவொரு காலனிழு

க்கும்படிபடி மீதிலுழைக்கும்பிறவியி தமையாதோ, பேர்தொடருக்
கும்பரிமள வாசமெனப்பொன்கிளரொளி போலுமெனச்செஞ்சொலி
னுறு பொருள்போலப், போதமணக்குந்திருவடி மீதுகருத்தொன்றி
டவுறு பூதிபடைக்கும்பரகதி யருள்வாயே, நாதமுறத்தண்டைக
ள்பல கீதமுறக்கிண்கிணிமணி நாவசையத்தண்டுளவள வியமாலை,
நாலவுடுக்குஞ்சிறுதுகில் சோரமிழற்றுங்குதலைக ளுவுதரத்தும்பிக
ளூறு மலர்சூடுங், கோதைநெகச்சிந்துர நுதல் வேர்வுதரக்குண்டல
வொளி கூரமுகத்தின்ப்ரபைபெழ மறைநாலுங், கூடிவரச்செந்தளி
ர்நடை கால்பதறத்தம்பியரொடு கோசலைமுத்தங்கொளவரு பெரு
மாளே. (௧௬)

ஓடுநதிசேர்மிதவைபின்வருமோ நீரைவிடவேகுமுதமுமெழு
மோ வோடைவடிவாய்வரவரவதன்மீன் மறைபோமோ, ஊணினொடு
போவதுபசியலவோ தீபவொளிதானறுநெயினளவே யோகையுறு
மோவிலைமகண்மணநேர் பொருள்போனு, ஞடிவிடுமேநிழல்வர்பிற
கே நாயகனொடேசுபமழிவிலையோ நாயிறெழுபோய்வெயில்விழவிலை
யோ விவைபோலே, நாளினுடனேயுயிர்செலுமினிநீ நாளையெனி
லோவசமலவுடனே ஞானநிலைசேர்பரகதியுறும்வா றருள்வாயே, நீ
டுமுகிலேயெனதுகண்மணியே ஞானவடிவேரகுகுலபதியே நீலம
லையேதயரதன்மகனே வெயர்வாற, நீர்கொள்சொரிகோ நுகர்வனத
ரவோ நாமமிடவோ துயில்கொளவிடவோ நீதியிளையாருழைகொடு
செலவோ மடிகோலி, யாடைபுனைகோவரைவடிமணிகோ கோதை
சொருகோகுழையிணையிடவோ வாழிவிரன்மோதிரநிரைசெறிகோ நி
னைவேதென், றூரவணையாமுலையமுதருளாய் நேயமுறுகோசலைமடி
மிசைசீ ராடுமரசேயயனரனிமையோர் பெருமாளே. (௧௭)

தொந்திசரியமயிரேவெளிறநிரை தந்தமசையவுடல்போய்வளை
யவுடை தொங்கவொருகைதடிமேல்வரமகளிர் நகையாடித், தொ
ண்டுகிழவனிவனாரெனவிருமல் கிண்கிணெனமுனுரையேகுளறவிழி
துஞ்சுகுருடுபடவேசெவிடுபடு செவியாகி, வந்தபிணியுமதிலேமிடியு
மொரு பண்டிதனுமெயுறுவேதனையுமிள மைந்தருடைமைகடனே
தெனமுடுகு துயரோடு, மங்கையழுதுவிழுமோசையுநமனு நின்றுச
ருவமனமேசிதறவுயிர் மங்கும்பொழுதுகடிதேகருடன்மிசை வரவே
ணும், மெந்தைவருகரகுநாயகவருக மைந்தவருகமகனேயினிவருக

வென்கண்வருகவெனதாருயிர்வருக வபிராமா, வின்சுவருகவரசேவ ருகமுலை யுண்கவருகமலர்சூடிகவருக வென்றுபரிவினொடுகோசலைய னுகி வினிபோதில், சிந்தையிளகவரைநாணெகிழவளர் குஞ்சியலைய நுதல்வேர்வசையவிரு செங்கைமருவுகிரிதாழ்வடமசைய மணிவாய் நீர்ச், சிந்தியொழுகநகையேபெருகவொரு தம்பிதொடரமுதி ராநடையொடவள் செம்பொன்மடியிலினிதேறியபராம பெரு மாளே (கஅ)

கதித்தகுடைக்கீழ்முறப்படுதண்டிகை யெடுத்ததலைப்பாரக்கரி யின்சிறு கழுத்திலிருப்பாரெத்திசையின்புற மசைவார்தங், கனத் தபொருட்போய்மெத்தமுறிந்துத முடைத்துகிலற்றேவட்டகருந் துணி கடுக்கியுடுத்தேவெட்குதல்கிஞ்சமு மிலராகிப், பதைத்துநடு க்காமற்றொர்புரங்கடை மிதித்திடர்பட்டேயச்சமுளங்கொடு பசி த்தனமப்பாபிச்சையிடென்றுயிர் தடுமாறிப், பதைப்பர்தவித்தேதரி ற்பதுகண்டுமோர் நிலைப்பரிவுற்றேகெட்டமனம்பெறு பணத்தைமக த்தாகக்கருதுந்துய ரொழியாதோ, விதத்தொடுசுற்றுவத்திரிதம்பிய ர் நிழற்சுவடொத்தேநட்பினணைந்திட வெடுத்துவளத்தேநற்சவுளங் ளொ டுபவித, மெனைத்துமியற்றுவற்பகல்சந்தத நிலைப்பிரிவற்றே கைக்கொடுமுந்திய வியற்கைமனுப்போல்கொற்றவனின்புற வளர்நா ளின், மதிக்குவிளக்காய்மிக்கருணைங்களொ டுயிர்க்குயிரொத்தேயுட் புறமெங்கணு மயக்கறவுற்றேமுற்றுமுணர்ந்தும துணரார்போன், மறைப்பொருள்விக்ஞானத்தடைவென்பது படைத்திடுசொற்கீதத் தொடடங்கலும் வசிட்டரிடத்தேகற்றுவிளங்கிய பெருமாளே.(ககூ)

மாலைகொந்தளபந்திபுனைந்துபொ னோலையின்கணணிந்தெதிர் கொண்டிட் வாடுகின்றமருங்கினறுங்கலை யதுசேரா, வாண்முகம் ப்ரபைகொண்டொளிர்சிந்துர ரேகைமுந்தவரைந்துதனங்களின் வாசகுங்குமசந்தகிலிங்கித மொடுபூசி, மேலிலங்குகரும்புநறுங்கொ டி தோளழுந்துநலஞ்செய்தும்மன்பத மீதுதண்டைசிலம்புசெறிந்தி னி துமராய, மேவுநன்பதியிங்கணிதென்றுரை சோலையின்கணக ன்றிடலென்றுவிர் தாவில்வஞ்சகர்முன்சொலியென்றமிழ் கெடலா மோ, நீலமஞ்சுவிளங்கியபங்கய மானகண்கைமுகஞ்சரணங்கொடு நீணிலந்தனில்வந்துபுகுந்தென வழகாகி, நேசமும்பரிவும்பெறுதம்

பியர் மூவரும்புடைநின்றுமகிழ்ந்திட நேரின்மங்கையர்சிந்தைசெரு ங்கனன் மெழுகாகக், கோலவெஞ்சிலைகொண்டுபுறங்கடை மீதுநின் றுநிரந்தரமுங்களி கூருமைந்தருடன்சபதஞ்சொலி விளையாடிக் கூனிநெஞ்சினில்வஞ்சம்விளைந்திட மேனிகன்றியலைந்திடவங்கவள் கூனிமிர்ந்திடவுண்டைதுரந்தருள் பெருமாளே. (௨௰)

வேதமெலாமிறந்து பூதமெலாமொடுங்கி வேலையெலாமெழுந் து பிரமாவும், வேறுளதேவரும்பொய் லோகமெலாமழிந்து வீடு றுகாலமந்த வடமீதே, சீதளமார்கொழுந்தி னோரிலையூடமர்ந்து சி றியபாலனென்றோர் வடிவாகிச், சிறியபாணிகொண்டு வாயிதழ்கோ லிமென்ற சேவடிகாணவென்று பெறுவேனோ, மாதவமாமுகுந்த சி தரதேவரங்க வாமனநாரசிங்க மணிவாழு, மார்பவராகமுந்து கூர் மவதாரதுங்க மாயவெனாவிறைஞ்சி மலர்தூவிக், கோதறுதேவர்க ண்டு வாழ்வுறவீதிநின்று கூனியொர்கூனிலுண்டை விடுவோனே, கோமளமானகங்கை வேணிசதாவுகந்து கூறுமிராமமந்த்ர பெரு மாளே. (௨௧)

கோயிலெனவுரையரங்க நீரகமழிசைகுடந்தை கோவலினி டைகழிபன்பி லுறையூர்பேர், கூடல்வினைகர்கணமங்கை காரகம் வடமலைபொன்செய் கோயில்கணபுரமழுந்தை புலியூர்நா, வாய்வடம துரைகுளந்தை நீர்மலைகடிநகர்தஞ்சை மாமணிதொலைவிலிமங்கை ந றையூர்கார், வானம்வெள்வரைதிருவிந்த ளூர்கடிநகரெனுமிந்த மா நகர்தொறுமுனைவந்து புகழ்வேனோ, ஆயுதவகைகள்பயின்று நீள்க லையடையவிளங்கி யாரணமெனவளர்கின்ற திருநாளி, லாடியச டையுமெலிந்த மேனியுமருவியதண்டு மாமுறுகரகமுமன்பு முளனா கிச், சேயொளிகிளரநடந்து கோசிகன்வருவதுகண்டு தேறுதலற மனமஞ்சி யெதிரேபோய்த், தீதறுமுனியைவணங்கும் பூபதிதயரதன் முன்செய் சீரியதவமெனநின்ற பெருமாளே. (௨௨)

உரையறியாதேசிலநாள்போயுஞ் சிறுமகவாயேதிரியாமேலங் குறுகலைதேருநெடுநாள்போயும் பொருண்மீதே, யுளமதுநாடாவகை யேதேடுங் கலைவிடாதேதனவானாய்நின் றுயர்குடிவீடாய்மடவார் போகந் தலையாயும், பொருளதுபோயேவறியேனாயும் பிணியதனா லேமெலிவேனாயும் பொறியனல்போலேபசியேமூளுந் துயராயும், பு

துநரைகாணாவுடல்கூனாய்வெங் கிழவனுமாயேயவமேபோமென்
பொழுதுபிரானேபிறவாவாழ்வின் கருள்வாயே, யரசர்பிரானைவர
வேட்கனுன் புதல்வனைநீதாவவனாலேயங் கனலவியாதேமகமீடே
றுந் தவமேயா, மதிசயவாழ்வேயுளதாம்வேறும் பலபுகழ்பேரும்விடு
வேனாநொந் தசம்படாதேயறிவாயேயென் குணம்யாவுந், தருதியெ
னாநீடிலகீரேழும் பிறிதருண்மேலோனாவையாடாவஞ் சகமறநேரே
கொடுபோவான்வந் திடலோடுந், தரணியில்விழாநிலைசோராநொந்
துடலதுவேராமுனிதாள்சூடிந் தயரதன்வாழ்வேசிவராமாநம் பெ
ருமானே. (௨௩)

பனிமலரெடுக்கிலவந்த மலரதுதொடுக்கிலமுந்து பழமலர்க
ழிக்கிலமஞ்ச னமதாடும், படிபுனல்விடுக்கிலநின்று திருவடிவிளக்கி
லதொங்கல் பழுதறநிறைக்கிலசந்து புகைதீப, மினிமையினளிக்
கிலவிஞ்சு கவரிகளிரட்டிலபண்பி னினையவகையெட்டினிரண்டு ப
ணிதானு, மிசையுறநடத்திலவன்போ டமுதுகள்படைக்கிலவென்
ற னிருகையுமவத்திலிருந்த பிழைதீராய், மனமிசைகறுத்துவெகு
ண்ட கவுசிகர்பதத்தைவணங்கி மகனொருசிறுபிளைவந்து தமியேனி
ன், மகமதுமுடிப்பனெதிர்ந்த நிருதரையறுப்பனெழுந்து வருகெ
னமறுப்பவெகுண்ட வினைநாடித், தனிமகனிலக்குவனந்த விருவ
ரையுமொக்கவழங்கு தரமலமறுத்திடலென்று பரிவாடே, தவமு
னிவசிட்டர்விளம்ப முனியுனதடைக்கலமென்று தயரதன்விடுக்கந
டந்த பெருமாளே. (௨௪)

அடியவரோதிருந்துமண்டர் மலரயனொபொருந்துமைந்த ன
னையதுவோபெரும்புயங்கர் பெருமானே, ரலர்மகளோபுணர்ந்தமங்
கை நிலமகளோவிரும்புநங்கை யருமறையோவிளம்புசெஞ்சொ லிரு
தாளின், விடுபுனலோநகரங்குகங்கை யசனமதோபரந்தவண்டம்
வெயின்மதியோவிரண்டுகண்க ளடன்மாவோ, விதிமறைரூபனின்
ப்ரபஞ்சமகிமையையாவர்கண்டுகொண்டு வெளியிடுவார்தரங்கரங்க
வருள்கூறாய், உடலுயிரேகவெம்பிநின்ற தெனவொருதாதையங்க
மூங்கு வொருதவன்வேணுமென்றியம்ப வவனோடே, யுறைநகர்வீதி
யுங்கடந்து சரயுவையேறிமுந்தியிந்த்ர னுலவியசோலைதங்கியந்த வ
ழியேபோய், முடுகியபாணமுந்தெரிந்து வரிசிலைகோலிநம்பித்ம்பி
முறைதவிராதுபின்பொருந்தி வரவேநீண், முடிபுனைகாமன்வெந்து

ழிந்து பொடிபடுகானகங்களெங்கு முனிபிறகேநடந்துசென்ற பெருமாளே. (உரு)

ஆசனமெனவடங்கி நீள்குடையெனவிளங்கி யாடையதெனவணங்கி வளர்பாய, லாமெனவுடல்விரிந்து பாதுகையெனவொடுங்கி யாரிருள்கடியமுந்து சுடராகித், தேசணிதிருவனந்தன் மீளவுமிளவலென்று தீவனமுடனலைந்து தொழுபாதந், தீமைகள்புரியுமென்ற னீரமில்கொடியநெஞ்சு சேர்வுறுமெனவிரும்பி லெளிதாமோ, வாசவன்வெருவவண்டர் கோவெனயமனொதுங்க மாதிரகரிகளஞ்சநவகோளு, மாறிடவெகுளிகொண்ட தாடகைவருதல்கண்டு மாதிவள்சரிதமென்கொ லெனநாடி, ராசதமுடன்மகிழ்ந்து கோசிகமுனியைமுந்தி யீரடிதொழுதுநின்று பெரியோனே, யேழுலகதிரநந்த மேல்வருகொடியமங்கை யாரெனவினவிநின்ற பெருமாளே. (உசு)

மீனெனவுதித்துமந்த வாமையெனமற்றும்வந்து மேருவையடக்குபன்றி வடிவாகி, மேல்வருமறப்புடுஞ்ச வாளரியெனப்பிறந்து மேதினிபளக்கவென்று குறளாகி, யீனமறவெற்றிகொண்ட மூவர்களெனச்சிறந்த ராமரொடுகிட்ணர்பின்பு வருமாவென், றேயவதரித்துமுந்து பாகவதருக்குகந்த தேமுறகொடுக்குமெந்தை யருள்வாயே, தானொருமறத்தியெங்கண் மாதவமழிக்கும்வம்பி சாதனையரக்கியென்று பலவாகத், தாடகைசரித்திரங்கள் யாவையுநிகழ்த்தியுன்பர தாபமிதனிற்றெரிந்து விடவேணும், வானுலகளித்தியென்றுநீதியொடெடுத்தியம்ப மாதெனநினைத்துநெஞ்சின் மிகநாணி, வார்சிலைகுனிப்பதின்றி யோர்கணைதொடுப்பதின்றி மாமுடியசைத்துநின்ற பெருமாளே. (உஎ)

மின்னைப்போலேயிடைதுவள வன்னப்போர்வெல்விழிபுரள வெண்முத்தேயாகியமுறுவ னிலவீன, வெம்மைக்கோலாகலமுலைகள் கொம்மைக்கோடேயெனமுடுகி விம்முற்றேவாரொடுகெறுவ வருகால்க, டன்னத்தானுதனதன வென்னத்தான்வார்குழன்மருவு தண்மைப்பூமாலைகள்சரிய விரிதோகை, தன்னைப்போலேமலர்மருவு பொன்னைப்போலேவருமகளிர் தம்மைக்காணுமனமெலிவ தொழியாதோ, மன்னுற்றேதாடகைமுடுகு வெம்மைச்சூலாயுதமுறிய வன்மத்தேவிசியமரமு மலையாவு, மண்ணிற்றூளாய்விழவிரகு

பண்ணித்தானேவுகன்மழையும் வண்ணக்கோலாக்லவலியு நிலைசாயக், கன்னத்தேகோல்பலசொருகு புண்ணிற்கேநீடெரிகதுவு கண்ணிற்கேபேய்நரிகழுகு விளையாடக், கன்மத்தாலானவண்மடிய மன்மத்தோர்வாளிகொடுழுது கன்னிப்போராடிய பெரிய பெருமாளே. (௨௮)

ஓடுமுருகுந்துயர்கொண்டு வாடுமிளகுந்தனதென்று லோபமுடனின்றுமயங்கு மிருளாகு, மூடுதெளியுந்தனிகண்ட தேதுமருவும்பலதொந்த ரூபமுமடைந்திடுமிந்த மனநேரே, கோடுறுகுரங்கெனவிஞ்சு நீடுசெயல்கண்டதும்வஞ்ச கோலமிதுதந்திடுபண்பு மமையாதோ, கோடிமுறைவந்தனைதந்து வோசரண்யவன்பருளென்று கூறுமுனதொண்டர்களன்பு தருவாயே, மாடுறுசிலம்புதொடர்ந்து கூடிவரவண்டர்நடுங்க மாநிலமதிர்ந்திடமுந்தி வருவானை, மாதெனநினைந்ததுவம்பு கோறிபழியன்றெனநின்று மாமுனிவிளம்பவொரம்பை விடலோடுங், காடுதிரண்மண்டியதிர்ந்து தாடகைபுலம்பியிருண்ட காரெனமுழங்கிவிழுந்த பொழுதேமுன், காதிவருகண்டகர்தங்க ளானவுயிரின்சுவையன்று காலனறியும்படிகண்ட பெருமாளே. (௨௯)

பசையற்றுவுடல்வற்றி வளைவுற்றுநடைநெட்டி பரியக்கைசொரியப்பல் விழலாகிப், பகலைக்கும்விழிகெட்ட குருடுற்றுமிகநெக்கு பழமொத்துநரைகொக்கி னிறமேவி, விசைபெற்றுவருபித்த மதுசுற்றிவிழுவிக்க மெலிவுற்றுவிரல்பற்று தடியோடே, வெளியற்பமெனும்விர்த்த வெனவெட்குசனனத்தை விடுவிக்கவருள்வைப்ப தொருநாளோ, அசைவற்றநிருதப்பெண் மடிவுற்றபிரியத்தி னடல்வச்ரகரன்மற்று முளவாமோ, ரளவற்றமலரிட்டு நிலமுற்றுமனவிட்ட வடிபற்றிவிடைபெற்று நெடிதேக, வசையற்றுசெடியற்று வினையற்றுமதமற்று வடிவற்றுநிகரற்ற முனிராசன், மதுரித்தமொழிசெப்பியருளூற்றபொழுதத்து மனமொத்தபடைபெற்ற பெருமாளே. (௩௰)

வீதியினின்றுநின்று காமனைவென்றுவென்று மேல்விழவந்துவந்து •விழியாகும், வேலையெறிந்தெறிந்து காதலறிந்தறிந்து வேதனைதந்துதந்து குழல்கோதிக், கோதையணிந்தணிந்து சாலவசைந்தசைந்து கூசுதலின்றியின்றி யருகாகிக், கூடியிருந்திருந்து வேசி

யர்கொண்டகொண்ட கோரணிகண்டுகண்டு தளர்வேனோ, போதவளர்ந்துகொண்ட தாடகையங்கழிந்து போயினபின்புநண்பி னெடிதேகிப், பூபதியென்றிருந்த மாவலியன்புகொண்டு போதமகங்கண்முன்செய் தலமேவிக், காதிபயந்தமைந்தன் வேள்விதொடங்கவன்று காதுதல்விஞ்சுதம்பி யவனோடே, கார்முகமுந்தெரிந்து வார்கணையுங்கைகொண்டு காவல்புரிந்துநின்ற பெருமாளே. (௩௧)

மிடியர்வாலிபம்வராடம்பர மகிரியேதுமிலாரோதுங்கலை விழுமியோர்சினநாணூர்தங்குல மநுராக, விழைவிலாதவர்பாலமைந்கணை கொடையிலார்பொருணல்வாய்தம்பலம் விரவுபேடிகைவாள்வேல்வெம்பசி யிலையாரோ, நிடையின்மேவியவுணுமின்சுவை குருவின்வாய்மொழிபேணூர்மந்திர மிறைவன்மார்புபெறுதாள்கொங்கைகை ளிவைபோலே, யெனதுஞானமும்வீணமங்கின யதனைவேறுபடாதேயிங்குன திருசரோருகசீர்பாதந்தனி லடைவேனோ, அடைவுசேர்முனிமாயாகஞ்செய் நெடியசாலையினூடேசென்றிடு மனவிலேவினைமாறுவஞ்சகர் படைமாரி, யனலமாமெனமேலேயுந்தியமுனியைநாடியுகீள்போர்கண்டிட வரியதோர்சரகூடாலங்கிர்த மதுகோலிக், கடுகியேவெமமாதாவின்பழி தருதியாலெனமேலேவந்தடர் கபடதாடகைபேறுமைந்தரின் மலைவிசுங், கரசுவாகுவுநேரேவிண்புக விரகினாலொருமாரீசன்பொருகடலிலேவிழவோர்பாணந்தொடு பெருமாளே (௩௨)

மடமகளிர்மாட்டின்மாட்டினை விரகிலெனைநாட்டிலோட்டினை வறுமைமுழுநீர்க்குள்வீழ்த்தினை பொருண்மீதே, மனமுறுபராக்கிலாக்கினை தனமுடையபேர்க்கியார்க்குமென் வரவுசொலியேற்கநூக்கினை பிணியாகுங், கொடியகனலூட்டியாட்டினை யசடனெனும்வார்த்தைநாட்டினை குறுகினபிராத்திநாட்களு மினிநீயென், குறைமுழுதுமாற்றியேற்றதொ ரடியரோடுகூட்டிவாட்டமில் குரைகழல்கள்காட்டிவீட்டினை யருள்வாயே, நெடுமுனிவர்கூட்டமேத்திய மறையினொலிசாற்றவேற்றதொர் நெறிமுறையின்வாய்த்தசாத்திரம் வழுவாதே, நிலைமைபெறுசூத்ரவாக்கிய கரணவகையாற்பிராத்தியி னிலமதுதாய்சம்வார்த்தெழு தவராச, னடுகனலெழூட்டிமாட்டுறு சமிதைவகைபோட்டுமூர்த்திக ளமரர்தசநூற்றுநேத்திரர் களிகூரு, மவியுணவையூட்டியிட்டிய மகமினிதுகாத்துமேற்படு மவபிருததீர்த்தமாட்டிய பெருமாளே. (௩௩)

படிகட்டியவேதவிதிப்படி நெறிநிற்பவரைதரிசித்திடு பதும்ப்
பதநாடுறுசித்தமு மநுபூதிப், பரதத்துவஞானவிளக்கமு மருளித்
தொலையாதக்ருபைக்கடல் படியப்படையாமலெனைத்தின மடவார்
தம், மிடையிற்சுழிசேர்கலவிக்கட னடுவிற்படியாமனநிற்கவு மிசை
யப்பொருடேடியழைக்கவு மதுபேணி, யிடருற்றுவிடாதுதவிக்க
வு மயலிற்கொடியாரதுகைக்கொள யமனுக்குயிராகியிறக்கவும் வி
டலாயோ, முடுகிப்பொருபூசலரக்கரை மகரக்கடலூடுதுரக்கவு
முடிதிட்டிடணவீழவறுக்கவு நதிபோலே, முழுகப்படுசோரிநிறைக்
கவு நெடுகப்பிணராசிகுவிக்கவு முநிரக்கினியோமமுநிட்டையு மழி
யாதே, கடுகிச்சரகூடம்வளைக்கவு மகமிப்படிபேணவுமொப்பறு க
லைகற்றவனுரைநற்றவன் மகிழ்வாகக், கனமுத்தணிசானகிபிற்பட
மிதிலைப்படைவீடுதனிற்புகு கருணைக்கடலேவிபவத்துறு பெரு
மாளே. (௧௪)

பரணியுலாவொருசற்றும்பொழுதிற் சொலவருகோவையடுக்கு
ங்கிளவிப் பயனுமொரோரிடத்திற்புகலப் பலநூலும், பகரவிவா
தவகைக்கும்புகுதப் பெரியபுராணகதைப்பண்பறியப் பதறியவா
சொடுசித்ரங்கள்வரக் கவிபாடப், பெருவிருதேநிறுவிக்கொண்டருள
ற் புததருவேமழைகைக்கொண்டகொடைப் பிரளயமேயினிநிற்குங்
கவிதைத் துறையேகேள், பிடிபணமாழிபதக்கம்பருமுத் தணிம
ணியாடைமிகத்தந்திசையைப் பெறுகெனவேலோபருணக்குண்டகரை
ப் புகழ்வேனோ, பொருதொருதாடகையைக்கொன்றயலிற் றவமு
னிவேள்விமுடிக்கும்பொழுதப் புகைவிழியாள்பெறுமைக்கண்டகரி
ற் கொடியோரைப், புணரியின்மூழ்கவிடுத்துஞ்சமரத் தொருவனை
வானிடைவைத்துந்தழலைப் பொறியவியாதுபுரக்குங்கருணைத் திரு
மாலே, யருண்மிகுகோதமனுட்ணங்கனுமற றுயர்வலமீதுதுடிப்பு
ங்கொளமுற் றடன்மகவான்மனமுட்கும்படிமுற் றவனூர்கின், றடி
வரலாறுகண்முற்றும்புகலத் திருமறைநாலுமணக்கும்பொடியிட்
டகலிகைசாபமகற்றுஞ்சரணப் பெருமாளே. (௧௫)

மதியுநெடும்பரவையேற்றபானுவு மிளிர்பகலுங்கனராத்ரியான
து மருவிருசந்தியும்வாய்த்தபூமியு நெடுநீரும், வளர்கிளரங்கியுமார்
த்தவாயுவும் வெளியுமொழிந்திடுகூற்றமானது மகிழுறமும்பலவாத்

துமாவுமி வகையர்வுஞ், சிதைவறநின்றிடுசாட்சியாய்நடு வொருக
ணுமம்பிரியாய்த்துராரகத சிறையிலிருந்திடுவேறகியாதொரு வினை
தானுங், நிலமளவுந்தவறுக்கொணுதுந னெறியினடந்திடமாட்சியா
ருமொர் திருவடியுந்தனுகாட்டிஞுலுமெ னிடர்போமே, மிதிலைநெடு
ம்படைவீட்டைமேவுமு னகலிகைதன்குறைதீர்த்துநாரிதன் விளை
வைவிளம்புதியாறறபோதன வெனலோடும், விரகுடனிந்திரர்காக்
கைகூடினர் கவுதமரங்கொருவாற்றைமேவினர் விரைவின்முயங்கி
னர்பார்த்தகோதமன் மகவான்மேண், முதிர்பலலிங்கமதேறறிஞரி
வள் வடிவுகலென்றிடவிட்டிஞரவர் முறையிடல்கண்டுகெணுக்கிஞரி
வ ணினதாளான், முதலுருவம்பெறநாட்டிஞர்கதை யடியில்விளை
ந்ததிமார்க்கமேயென முனிசொலவங்கதுகேட்டவானவர் பெரு
மாளே. (௩௬)

கயலைக்கறுவுகபாடவஞ்சக சரிதப்ரபலவிசாலசம்ப்ரம கலகக்க
படவிகாரவஞ்சன விழிமாஞர், களபப்பரிமளவாசபங்கய முகிழுத்
துபயசமானமங்கல கடினப்புளகிதபாரகொங்கைகள் பிரியாதே, ச
யனக்கலவிவிநோதரஞ்சித வசனப்ரியவநுராகவிங்கித சரசச்சுரத
சமேளசிங்கியில் வசமாகிச், சருவத்திருவுளமோகினன்பரை மருவ
த்திருவுளமோவுகந்தது தனையிப்பொழுதடியேனுணர்ந்திட வுரை
யாயோ, வயனக்கனுமிமையோர்பணிந்தெழ விடைபெற்றகலிகை
தானகன்றிட வருமைத்தவமுனிராசன்முன்செல வுயிர்போலே, ய
டியிற்பிறகிளையோனும்வந்திட வொருவிற்கரமிசையேபொலிந்திட
வருகிற்றெரிவையர்மோகனங்கொள விதனூடே, வெயிலைத்தரு
மணிமேடையின்புற மயிலொப்பெனவிளையாடுமிந்திரை விழிதைத்
திருபுயம்வாடவங்கவண் முலைமீதே, விமலக்கமலவிலோசனம்புக
வொருவர்க்கொருவரவாவுறும்படி மிதிலைத்தெருவழியேநடந்தருள்
பெருமாளே. (௩௭)

வனிதைமருவுபுதுவைகுருகை பிரிதிபுலிசைசிறுபுலிசைவெள் வ
ரைகணபுரம்வடமதுரைவி ணகரேசீர், மலைகடிநகர்கடிகைதுவரை
நறைசைவதரிகரிகிரிதிரு மழிசையரிவிணகரிதிருநை மிசைபூரவி,
யினையபதிகணினையுமவர்கள் வினைகண்மிடிகள்பசிகள்பழிக ளைவை
யுமவலமுழுதுமகல வருளேசெய், தினியதிருவுமினியவழியு நினது
பெரியசரணகமல மெனதுமனதுபயிலமுயலு மதிதாராய், புனையு

மிதிலைமகளிர்மறுகின் மறுகிபிறகுகழியவரசு பொலியுமனைமுனனு கியவையி லழகாகப், புகுதுமளவின்முனிவனடிகள் பரவிமருவியு டலமுழுமை புளகமெறியவயனையனைய பெரியோனே, தனுவுமினி யகணையுமெவரு மெழுதவரியவடிவுமிளைய சதுரனளவிலருளுமுடை ய தனியாண்மைச், சமரசூரன்வரவையுரைசெ யெனவுளுருகியிரு கைதொழுது சனகன்வினவுபரமபுருட பெருமானே. (௩௮)

மனையொடுவாசல்கண்டிருந்து வினைமடவாருடன்பயின்று ம ருவியதாயர்தந்தைமுன்பின் மகிழ்பாலர், மரபினுளார்களென்றுது ன்று நெடுவலையூடுசென்றழுந்தி வழிவழிபாதகம்புனைந்து திரிவேனை த், தினையளவேனுமன்புதந்து னடியவரோடுதொண்டுகொண்டு சி லுகுகள்யாவையுங்களைந்து சடகோபர், திருமறையயிரந்தெளிந்து வளமுளகோயிலின்கண்வந்து செயசெயவாழியென்றியம்ப வருடா ராய், வினவியபோதுகங்கைதந்த நரபதிபோன்மண்டலஞ்செய் வெயில்விடுபானுவஞ்சதுங்கன் மனுநீதி, விரவியகோசலம்புரந்த ச ரயுவைநாடனிங்குநின்ற விறலிளையாளொடிங்கிருந்த விருவோர்மு ன், றனிமகனாகவந்தகொண்டல் பெயருமிராமசந்த்ரனுங்க டனுவ லிகாணவந்தபண்ப னுலகாளுந், தயரதபூபன்மைந்தனென்று கவுசி கர்கோன்விளம்பவன்று சனகன்முனேவிளங்கின்ற பெருமானே ()

ஆனையதுமூலமெனத்த னாவிடுபோதிலழைக்க வாதரவினொடு மறைப்புண் மிசையேறி, யானமலர்வாவியினுற்று மாமுதலைவீடு பெறப்பொ னாழிதனையேவுவிசித்ர மதுபோல, மேனியிருள்போனி றத்த காலனெனைமோதிகயிற்றில் வீசியெதிராடியலைத்து வருபோ தின், வீரவடிவாளியும்வெற்றி வார்சிலையுநீயுமெனக்கு மேவுதுணை யாயெதிர்நிற்க வரவேணுந், தானைமிதிலேசனுரைக்க வோராறுபதா யிரமிக்க தாவில்வயவீரர்நெருக்கி நிரைதோளின், சாதுரியமானதி யத்தி னூடுதெறிபேணிமடுத்த சார்பினிடைமார்பினணைத்து நனி போதா, மாநிலமொரேழுமதிக்க ராசசபைமீதினிலிட்ட வானுறுவி ன்மேருநிகர்த்த சிவசாபம், வாழ்வுபெறுசீதையொருத்தி சூடியிட, நாடியெடுக்கு மாலையெனவோடியெடுத்த பெருமானே. (௪௰)

அகத்திலுமிருப்பை புறத்திலுநடப்பை யளித்துடனழிப்பை யழியாதே, யடக்குவைதெரித்து விடுப்பைவெளிநிற்பை யருட்செய

நிலைப்பை யொழிபாவுன், மகத்துவமொருத்த ருரைக்கவுமெடுத்து வழுத்தவுமதிக்கி லெளிதோவுன், வசத்திலொரியற்கை செயற்கை யிலைமற்றுன் வழிப்படுமெனக்கு நிகர்யாரே, நகத்திரள்வெடிக்க மதக்கரிபதைக்க நடுப்பணிநெளிக்க மதிபானு, நலக்குறவுடுக்கள் பொடப்பொடெனவுட்க நமற்குயிர்திடுக்க முறவேநீள், சகத்ரியபனைத்து நடுக்குறநிருத்தர் தனிச்சிலைவளைத்துவ வையூடே, சடக்கென வெடுத்து முறித்துநிகரற்ற சமத்துநிலையிட்ட பெருமாளே. (சக)

மேகநிறம்வாழிபற்ப நாபிமலர்வாழிசக்ர மேவுகரம்வாழிநித்தம் வினைமூடும், வேதனைகள்சேர்பிறப்பை மாறியினிஞானபத்தி வீடுபெறவேணுமற்ற தருள்வாயமுன், நியாகபரனுகமிக்க வாழ்வுடையனுகவுற்ற சிலருணனுகநிறக விலைசகாணுஞ், சிரியவனுகவெற்றி மாகவினுகரட்சை சேரடிமையாகமுற்று மருள்வாயே, நீகருணையாலவிளித்த ராகவனென்வேள்வியுற்று நீடுநிலைதான்முறித்த படியாலென், னையமகள்பாணிபற்ற வேணுமினிமாதர்மக்க ணோரில்படையோரமைச்சர் கிளைசூழ, வாகடிதெனுநிறத்த கோசலமகீபதிக்கு மாசில்கல்யாணபத்ரி யதனேடு, வாய்மைபெறுதூதுவிட்ட நீள்சனகர்கோனைமிக்க மாமனெனவேபடைத்த பெருமாளே. (சஉ)

நினைவிலேயெவரோடுமொழிந்திடு மொழியிலேதவறாதுநடந்திடு நெறியிலேவினைபாவையும்வென்றிடு முணர்வூடே, நிலையிலேயழகாகிநிரம்பிய வடிவிலேயிருபோதுநிரந்தர நினதுபாவனையேகொடுவென்றிடு முனதாசர், மனையிலேயவர்கூடியிருந்துள சபையிலேயவர்கால்கணடந்துள வழியிலேயெழுதூளியெனுமபடி திரியாதே, மடநலார்வசமாகியயர்ந்திடு கொடியனேனொருகாலமடங்கியுன் வரசரோருகசீர்பாதந்தனி லடைவேனே, சனகர்கோன்விடுதூதன்வழங்கிய வியமேவோலையையோதியுணர்ந்துள தனமெலாமெதிர்வீசிமகிழ்ந்துதனுயிர்போலுந், தனையாமிருவோர்கண்மடந்தையரறுபதாயிரமூவர்கண்மந்திரிகள் சகலசேனையும்பாவருமன்பொடு புடைசூழ, வினயமாகவொரோசைநெடுங்கடல் வருவபோன்முரசானதிரந்திட விரகினுலழகாகியசந்திர வரைமேவி, விசைகொடேமிசையேவருதந்தையை யெதிர்கொளாவனைவோர்களொடுந்திரு மிதிலைமேவுவியோமநிறங்கிளர் பெருமாளே. (சங)

விதியென்றுருக்கொடிந்த வுலகம்படைப்பையிந்த்ரன் மிருகண்பு
பற்றுதம்பி யுருவாகி, விரகின்புரப்பைபகங்கை முடிகொண்டபித்த
னென்று மிடல்கொண்டழிப்பையுன்றன் விளையாடற், கதிகொண்
டுரைப்பதன்று சொருபந்தெரிப்பதன்று ககனஞ்சிறப்பமைந்த திரு
மேனி, கருதுங்கணக்கிறந்த வுனைநெஞ்சுறத்தெளிந்து கரைகண்டு
நிற்குமின்ப மடைவேனோ, வெதிர்கொண்டழைத்துவந்த சனகன்ப
திக்குள்வந்து ரவிதன்குலத்துயர்ந்த நரபால, னெழின்மணடபத்
திருந்த பினர்பண்பிலக்கணங்க ளவையுந்தெரிக்கவன்று மகிழ்சீ
தை, மதிமண்டலத்தைவென்ற முகமும்பெருத்தகொங்கை மலையுஞ்
சிறுத்தனுங்கு மிடைநூலும், வடிவுஞ்சிறக்கவந்து சபையின்கணிற்
றலகண்டு மயல்கொண்டநற்றெய்வங்கள் பெருமானே. (சச)

பவளத்துவர்வாய்மகளிர் வசனத்தினிலேவதனப் பதுமத்தினி
லேமருவி விளையாடும், பரிசத்தினிலேகலக நயனத்தினிலேவினை
செய் பகரத்தினிலேயொழுகி வசமாகி, யவலத்தினிலேபொழுது
கழியப்பொருள்போய்வறுமை யடையப்பழியேபெருக வவரோடே,
யளவற்றி மோகனமொ டொருமித்திடுபாவியையு மடிமைக்கொள
வேநினைதல் புரிவாயோ, யிவனுக்கிவளேமனைவி யிவளுக்கிவனேபதி
யு மெனவுட்கருதாவரசர் மறைவாணை, ரிவரிப்படியேமொழிய வ
வையிற்கொடிபோன்மதுர மெழுசொற்கிளிபோல்விரவு மொருசீ
தை, கவளக்கரிபோலவதெ னுயிருக்குயிரோகரிய கடவுட்சுடரோ
வெனவுண் ணிறைமாழ்கிக், கவலைப்படமாமனதின் மயலிட்டநனை
யுருகு கருணைக்கடலேபெரிய பெருமானே. (சரு)

வாணிமலரோனையன்புகொண்ட தேவியபிராமியந்திசந்தி மா
மறைவலோர்வணங்குகின்ற முதலாளி, மாயையதிருபிதிங்கடங்கு
வேணியுடையாள்ப்ரபஞ்சமெங்கும் வாயமைபலவாறுகொண்டியம்
ப வருண்மாது, பாணியொருநாலுடன்பொலிந்து தாவளியமாய்வி
ளங்குமங்கை பாரதியெனுவில்வந்திருந்து விளையாடப், பார்முழு
துநீபளந்தெழுந்த தாண்மிசையிலேவிளங்குகின்ற பாடல்கொடுபா
டியன்பர்பந்தி யடைவேனோ, காணவிடியாதுகங்குல்கங்குல் பே
ணைமுடியாதுசங்குசங்கு காதலறியார்கள்பெண்கள்பெண்க ளனை
லாகிக், காயுமினிவீறுதிங்கடிங்கள் சாலவதிபாவிதென்றறென்றல்
காமன்வருவீதியெங்குமெங்கு நிலைகாணே, ஞுணிசிலைதூணிகொண்

டுகொண்டு தூரவொருமேகநின் றுநின்றெ றுணமுடனுவியுண்ட
ண்டதெனமாழ்கி, நாடுமொருசீதையங்கிரங்கு வாயவளின்மோ
மிஞ்சமிஞ்ச நாளைமணமாகுமென்றிருந்த பெருமாளே. (௪௬

வாரமொடுபேசுநண்புபண்பு தீரநிலையாண்மைநன்றிவென்
வாய்சதிரமேன்மைதஞ்சமின்சொல் வலிநேயம், வாசிகொடைப
ரமன்பொழுங்கு பேரறிவுதேசுநன்குணங்கள் வாழ்வுபலநூல்வி
ங்கமந்த்ர நெறிநீதி, காரியவிசாரநம்புசிந்தை வாழ்வுகிளையோதன
தனங்கள் காமன்ரதிரூபவங்கிசமிந்த நலம்யாவும், காசினியினீயெ
ழிந்துபின்பு வேறுடையர்யாவரென்றிரந்து காவலரையேபுகழ்ந்து
வம்பி லுழல்வேனோ, மேருகிரிபாரகொங்கைகொங்கை காலன்வி
தூதுகண்கள்கண்கள் மேகமவர்பாரகொண்டைகொண்டை யவ
தாமோ, வேரிமலர்மேவுமங்கைமங்கை யாரநகைமாரசிங்கிசிங்கி மி
ளிநியாதுசென்றசென்ற நடைதானென், றுருயிரையீருகின்றதி
ன்று யாதுமவர்கோலவஞ்சம்வஞ்ச மாரமழலைவீசுதென்றலகொன்று
விடுமாறு, லாசையெனவாசையென்றுநின்று சீதைதிருமேனிகண்
டவன்று ளாதரவினோடறிந்துகொண்ட பெருமாளே. (௪௭)

நகுமுத்துமாலைகட்டு முலைவெற்புமாகிமற்றை நடுவற்பமாயி
ளைத்து வளர்தோளு, நலமுற்றுநாணமச்ச மடமுட்கொளாவிருப்பு
நயனத்தினுலுரைக்கு மிதுகால, மகிலத்திலாரிவட்கு மணமுற்று
வாரெனத்த மகமுற்றபேருரைப்ப ரிறைவாநீ, யதுபற்றெனவொரு
த்தி வரவைக்கடாவன்மற்று மசடர்க்குநானுரைத்து மெலிவேனோ,
மகிமைப்ரதாபமிக்க மிதிலைப்பிரானுக்கென் மகள்பத்நியாமென
த்தண் ணளியோடே, மறையிற்ப்ரகாரமிட்ட புனல்கைக்கொளா
மகிழ்ச்சி மனமொத்ததோர்முகூர்த்தம் வழுவாதே, தகைபெற்றவே
ள்விமுற்றி முனிவர்க்கெலாமிகுத்த தனமுற்றுமேயிறைத்து முறை
யாலே, சரியுற்றபாணிபற்றி யனல்சுற்றியாதரித்த சனகிக்குமாலை
யிட்ட பெருமாளே.
(௪௮)

வள்ளியிடைப்பொற்றுகிறனைநீக்குவ ருள்ளிலொதுக்கித்தன
கிரிகாட்டுவர் மௌவன்முடித்துத்தெருவிலுலாத்துவர் விழியாலே,
மையல்விளைத்துப்பரிபவமாக்குவர் கையிலகப்பட்டவர்களைமேற்
கொடு வல்லவிசித்ரக்கலவியின்மூட்டுவ ரொழியாதே, யுள்ளபொ

ருட்பற்றுவர்பிணையோட்டுவர் தள்ளியபிற்றைப்பொழுதினிலெய்ப்ப வருள்ளமொருத்தர்ப்பிரியமெனகாட்டுவ ரவரோடே, யொல்லுமனத்துப்ரமையுடையேற்கினி யல்லலறுத்துக்கொடியபராக்கற வுய்ய வழைத்துத்திருவடிகாட்டுவ தொருநாளோ, யெள்ளலில்கொற்றத் தசரதனார்க்கினி யுள்ளமுவப்பக்கிளையிறுமாப்புற வெல்வளமைக்கட்கவுசலைவாழ்த்திட வறவோர்நின், றெல்லையில்வர்க்கச்சுருதிகள்கூப்பிட நல்லமரர்க்குத்துயரதுகீழ்ப்பட வில்லிடைவைத்துச்சனகனுநேர்க்குற முனிகாண, வெள்ளைமருப்புக்கரியுரிபோர்த்தவன் வல்லசுரர்க்குப்புகலெனுமாப்புர மெள்ளவொதுக்கிப்பிரியமுனூட்டுறு தழனூள, வெவ்வரவைச்சிக்கெனவதின் மாட்டியொரொளியநெட்டைக்கணையதுபூட்டிய வில்லைமுறித்துச்சனகியைவேட்டருள் பெருமாளே. (௪௯)

கனகசித்திரகூடம்வைகுந்தம்விண் ணகரிபுட்குழிநாகைபுளிங்குடி கடன்மலைப்பதிசீவரமங்கைவெள் ளறையூழிக், களம்வெளக்குளமரதைகுறுங்குடி யுயர்கவித்தலம்வாலிகணங்குடி கருதலுற்றதுவாரகைமுந்துய முனைகோவர்த், தனமிசைக்கள்வனூர்வெளியங்குடி புருடவுத்தமமூரகநன்பதி தடவயற்பரமேசுரமுந்திய பரிசாரந், தகு திருப்பெயர்சேறையரன்பணி யினியமுட்டமெனுவுலகந்தொழு தலமனைத்தினுநீயுறையும்புகழ் பரவேனோ, அனுசருத்தமர்மூவருமுந்திய சனகனுக்கிளையானருண்மங்கையர் அதிகுணத்தொருமூவரையுங்கனல் கரியாக, வவர்தனித்தனியாகமணந்திட வொருவகைக்கலியாணமெனும்படி யடைவினிற்றவிராதுநடந்தபி னிளையாரோ, டினியபத்தியினாலயன்மைந்தனை வரிசையைத்தருகாதிதன்மைந்தனை யிறைவனைப்பெறுதாயரைவந்தனை புரியாவந், திசைபுலப்படவானகதுந்துமி யதிரமெய்த்தவராசிமொழிந்திட விலகுபொற்றிருமாதுடனின்புறு பெருமாளே. (௫௰)

கொடுப்பரோவஞ்சமேகொண்டு தரப்பரோவென்செய்வோமென்று குறிப்பரோதங்கள்பால்வந்து மிடிகூறிற், கொதிப்பரோவஞ்சியேகன்றி பொளிப்பரோநஞ்சுவாளங்கை குறைப்பரோவம்பராய் விஞ்சு கயவோர்தா, மடிப்பரோவென்றுநீள்சிந்தை யிளைக்கவே சென்றகால்பிந்த வடுத்தநாவின்கணீரின்றி வறியேன்யான், அருட்செய்வாய் கொண்டலேயென்கை விடுத்துநீ யண்டமேயுண்ட

திப்ரதாபங்களைகிஞ்சி துணர்வேனோ. தடக்கையாலன்பொடே மென்கை பிடித்தநாண்முந்தவேவந்து தனித்துவாழ்கின்றபோதின் கண் மகிழ்சீதை, தனக்குமோகங்கொளாநின்று கயற்கணேயென்க ணேயண்டர் தவத்தினால்வந்துபார்கொண்ட சனகேசன், மடக் கொடிசெம்பொனேபென்ற னுயிர்க்குள்வாழ்வஞ்சியேயுன்றன் மரு ட்டருவின்பமேயன்றி யினிமேல்யான், மதித்துமேகண்டுமால்கொ ண்டு புறத்துளார்மங்கைமார்கொங்கை மனத்தினுலுந்தொடேனெ ன்ற பெருமாளே. (௫௧)

அங்காதரவொடுநினையவுமோகச் சிந்தாகுலமதுதெளியவுமாதர்க் கன்பாயுருகுதலொழிபவுமஞானப் படையாலே, யஞ்சாதுறுபகை களையவும்வேரிப் பைந்தார்கொடுநனிபணியவும்வானத் தண்டார்பதி தொழுதிருவடிமீதிற் றலைசேரா, விங்காரெதிரெனமகிழவுஞ்ஞானத் துன்பேரிசைசெவிபருகவுமேலைக் கென்பாருறவுகணெகிழவும்யானி ப்படிமீதே, யென்றேபெறுவதுபொழுதுகள்வீணிற் சென்றேகழியு முன்மதியுபதேசித் திந்தாபிடிபரகதியெனவாழ்வித் தருள்வாயே, சங்கார்மிதிலையினுபர்கலியாணச் சிங்காரமுமதின்மகிமையுமாண் மைச் சந்தோடமுமினிமையுமுளதாகிச் சனகேசன், றன்பால்வி டைகொடுகரிபரிதேர்முற் றுந்தானைகள்வரமுரசொலிவீரத் தண்சா மரையிருபுடையினும்வீசத் தமர்சூழக், கொங்கார்பரிமளதுளவணி மாலைத் திண்டோள்பொலிவெழுமரகதமேருக் குன்றுமெனவருள்வ டிவெனவீரச் சிலையோடே, கொந்தார்புரிகுழல்வரிவிழிநீலச் சந்த் ராநநசனகியைமகிழ்வாகிக் கொண்டேவருமழகியமணவாளப் பெருமாளே. (௫௨)

இருகையோதொழாதுபற்றி மலரெடாதிடாதுசித்த மிளகுரு துநாவுமிக்க திருநாம மிசைபாடேசொலாதுகெட்ட தலைசெயாது தாள்வணக்க மிலியநீருகாவிணைக்க ணிதனாலே, யுருகுநேயமேவு பத்த ருருகுசார்கிலேனவர்க்கு முரியனாகிலேனெடுத்த வுடல்பாவ, மொருவனைநீக்குநைபக்க னுதவுபார்வையால்விலக்கி யுறுதிகூறிவா ழவைப்ப தொருநாளோ, வரசனாவியேபதைக்க வுலகமேழுமேப்ரமி க்க வடிபொறாதராநெளிக்க முடுகாவந், தனுகிநானலாதுமற்று மெ வனடாவிராமபத்ர னவனைமோதுவேனெனத்த னதிரூபம், பரிதி கோடிபோலெறிக்க மகுடவேணிதாழருத்ர பரமயோகிபோலதட்டி

தரமேறீ, பழையசாபமேவணக்கி யறிவையோவெனுவெதிர்த்த பர
சுராமன்வீறளித்த பெருமாளே. (௫௩)

இருவினையைமூட்டிமயங்கு மதியையதின்மாட்டியுலைந்த வெ
னைநெடியகோட்டிகள்கொண்டு நரகூடே, யிறுதியறவீழ்த்தியிறந்
து பிறவியெழுகாட்டினுள்வெம்ப லிவ்வளவினில்வேற்றுமைகண்ட
தமையாதோ, வருமறைகடேற்றமிகுந்த திருவடிகள்காட்டியழுங்
குமவலமுழுதோட்டியனந்த வெகுமாயத், தகிலவிளையாட்டொடு
ழுந்த விதுவுமொருகூத்தைநினைந்து னடியரொடுகூட்டிவைகுந்த
மருள்வாயே, பரிசுதரநீட்டிவழங்கு நெடியசிலைகோட்டிமுனிந்து
பகழியதுபூட்டியவன்செய் தவம்வாரிப், பரிபவமதாக்கியபின்பு வி
டையருளிநோக்கிபதந்தை பழையவிடர்நீக்கிநடந்து வழியூடே, தி
ருவடிகள்போற்றிவணங்கு பரதனையும்வாழ்த்தியுகந்து செயமருவு
பாட்டனிருந்த நகராளத், திரள்புயபராக்ரமதுங்க விளவலொடு
போக்கிவிளங்கு திருவொடுமயோத்திபுகுந்த பெருமாளே. (௫௪)

எறிபடையெடுத்துமோர்கர மகிடமுமுகைத்துமேவிடு வெரி
யெனவிழித்துவீசிய கயிறோடே, யிடியெனமுழக்கியேயெதிர் கறுவு
றுகறுத்தகாலனை னிறுதிநிலைபற்றியேவரு மொருபோது; முறுகுக
னலொத்ததாடகை வெருவுறவளைத்தசாபமு முனிசொலவிடுத்தபா
ணமு மிருதோளு, முதுகிடைபிணித்ததூணியு மழகியபசுத்தமே
னியு முறுவலுமுகப்ரசாதமு மறவேனே, யறநெறிவிளக்குகோசலை
மருமகள்வடித்தவோதிய ளயில்விழிபிடித்தகாதின னிருபோது, மரு
மறைமணக்குமேனியள் வரகமலமுற்றபாணிய ளமுதுறுசிவத்தவா
யினளருண்மாறுப், பொறியுலகுபெற்றபூரணி பிரமனையளித்தநா
யகி புணரியிலுதித்தகாரிகை மறுநாடாப், புதுமதிமுகத்தள்சானகி
முகிழ்தவிசித்ரபூடண'புளகிதமுலைக்குண்மூழ்கிய பெருமாளே. ()

பாலகாண்டம் முற்றிற்று.

ஸ்ரீராமதாஸர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீராமஜயம்.

# இராமசயம்.

# அயோத்தியாகாண்டம்.

---

கனமேகொண்டவெலும்புறுசங்கிலி மலநீர்நின் றுநிரம்புபெரும்
பொதி கமலேசன் கைவரைந்திடுசெம்புட நரிநாய்பேய், கழுகேதுந்த
மதென் றுவிரும்புறு தசைசேருண்டிநெடும்பசியென்றொரு கதமேவு
ம்புலிதங்கியகந்தர முலைவாகு, மனநீள்வெம்புளிருந்தபொதும்பர்வி
ரகமாமங்கிவதிந்திடுமண்கலம் வருவாரஞ்சவளைந்திடுகண்டக கருவே
லாம், வடிவேகொண்டுநெடும்புவியின்சுமை யெனவேசந்ததமிங்குழ
ல்கின்றவென் மகபாவங்கடொலைந்திடவென்றருள் புரிவாயே, சன
கேசன்பெறுகொம்புடனின்புற வுறைநாளின்கண்மகிழ்ந்தரசன்புவி
தனைநீகொண்டிடநின் றுபெருந்தவ முயல்வேன்யான், றனயாவென்
றலுமன்புபொருந்தலி னகர்தானெங்குமணிந்திடமுந்திய தவராசன்
புனல்கும்பநிரம்புபு லுடன்மேவ, முனிவோரந்தணர்மந்த்ரிகளெண்
டிசை யரசோர்மண்டபமெங்குநிறைந்திட முதலேமஞ்சன முங்கொ
டலங்க்ருத பணிபூணு, முரசேமண்டியதிர்ந்தெழவங்கொரு ரதமே
ல்கொண்டுயர்தந்தையகந்தனின் முடிசூடும்படி வந்துபுகுந்தருள்
பெருமாளே. (க)

கருமுகிலெனவோவிருண்ட தொருமணியெனவோகுளிர்ந்த க
லைகடலெனவோமலர்ந்த கழுநீரின், கமழ்தடமெனவோபரந்த ய
முனையதெனவோநிறைந்த ககனமதெனவோ நெருங்கியலர்பூவைத்,
திருவனமெனவோசிறந்த வுருவினையடியேனறிந்து தெளிவுறவுரை
யாடவொன் று முணரேனுற், செயசெயவரீராமசந்த்ர ரவிகுலரகு
நாதவென் று சிதைவறுபெயரேபுகழ்ந்து திரிவேனே, பரவியவொரு
வாணவகைகொடுருக்கி நடையாலே, கொடிநூலிடையையனுக்கி வ டபூதரகுவடொத்த குளிர்மாமுலைகளசைத்து மறுகூடே, யலையாத வரையலைத்து நலமேவிலையெனவிற்கு மதிமோகனமகளிர்க்கு வச மாகி, யறிவானதுபறிபட்டு விடலோருமுடிவினுனக்கு வழிகோவடி மையிழைப்ப தருள்வாயே, முலைமேலிருகைபுடைத்து மலர்சேரள கமவிழ்த்து முறையோவெனவலறுற்று வருதாரை, முதிராகுலமொ டிசிற்க வநுமான்முதலியர்சுற்ற முதல்வானவர்கள்வழுத்த வினை யோவென், றலையாவிரவிமகற்கு மலைவாழ்வுதவியுரத்தி னுயர்வாலி யுமெதிர்நிற்க வுடனேயுங், கொருமாமகளையழைத்து நெடிதேதலைத டவிப்பொ னுடைவாளினிதுகொடுத்த பெருமாளே. (உ௰)

காயமோரிலையாதுகருத்திலுன் மாயமோதெளியாதுபெருந் திடு காதலோவிலகாதுநெருக்கிய சுகமான, காவலோடுநிலாதுநெரு க்கிய பாவமோதொலையாதுவிதித்துள காலமோதவறாதுகடக்கவும் வழிகாணே னீயலாதினிவேறொருவர்க்கிவை பாரமோவெனையோ டவிடுப்பது நீதியோதிருஞானவிளக்கினிலொளியாலே, நீடுபேரிரு ள்யாவுமகற்றியு ணுமமாயிரமோதியடிக்கடி நேயமூறிடவாழும்வரத் தினை யருள்வாயே, தூயபேரடையாளவடிக்கணை மார்புமூழ்கவி டாதுபறித்துடல் சோரிசோரமண்மீதிலரித்திரு வடிசேரச், சோதி ஞானமெலாமறிவுற்றிது காலமாமெனவேகருதிப்பெறு குனுவோடி ளையானுடைக்கல மடியேன்முனை, வாயிறைறியாதுபிதற்றிய தீ மைசேர்பிழைகோடிபொறுத்தருண் மாயமானிடமாகியெனக்குமு ன் வருமாலே, வாழிவாழிபராபரவுத்தம ராமராமவெனுவுநுகித்தொ ழு வாலிவாழ்வுறவீடுகொடுத்தருள் பெருமாளே (உக)

விதனமொடுதிரிவிக்கு நெறிமுறைமைதவிர்விக்கும் விரகுப வபுரிவிக்குமிழிவானோர், விரவுமணைபுகுவிக்கும் வழுவுதொழிறருவிக் கும் வெகுளிதனைவருவிக்குமயாய, வுதரமதுநிறைவற்ற பெரியகட லினுக்கு ஞறுகனலுமவிகைக்கு வகைநாட, வுரியபொழுதலதற்ப தின துதிருவடிபற்ற வொருபொழுதுமறநிற்கை தவிரேனே, முதல் வனையனவிசிட்டு மருவுகடன்வகைமுற்றி முறைமையநுமனுமிக்க கிளையாவு, முதன்மைமரபொடுசுற்ற வுலகமுழுதளவிட்ட முளரி தொழுபொழுதத்து மகிழ்வாகி, மதிகொள்கவியரசற்கு விடையரு

ளிவழிவிட்டு மதுரமொழிபகுசெப்பி யவன்வராழும், வளநகரியதனு க்குளிளையவனைவரவிட்டு மணிமவுலிபுனைவித்த பெருமாளே. (உஉ)

முனையுடையகொம்புகொண்டு தரணியையிடந்தெழுந்து மூதுதிரையடங்கவங்கொர் மயிரூடே, முறைமுறையொதுங்கவம்பொனெடுவரைகுளம்பினின்ற முதுபரவினங்கொடுங்க மிடல்சேரு, மினையதொருபன்றியொன்றின் வடிவமதுகொண்டவுன்ற னெழிலளவுகண்டியம்ப வுரியாரா, ரிமயன்மகள்பங்கனந்த மலர்மருவுமைந்தனிந்த விருவருமறிந்துநின்ற விடமேதோ, தனியிளவல்சென்று வென்றி மணிமுடிபுனைந்தபின்பு சடுதியினெழுந்துமுந்த விளவீரன், சரணகமலம்பணிந்து வளநகரகன்றுதுன்று தனிவிருதுமங்கலங்கள் பெரலிவரக, வனுமனெடுமைந்தனெங்கள் சதவலிமயிந்தனெண்கி னரசுகுமுதன்றுமிந்தன் முதல்வீர, ரனைவரொடும்வந்து கண்டுகவியரசுகந்திறைஞ்சியடிதொழமகிழ்ந்திருந்தபெருமாளே ()

உடுத்ததுகில்விடுத்து மணிக்கையிறுகமுத்த முறுத்தமுலையுரத்தின் மிசைமூழ்க, வுடற்குளுடலழுத்தி முகத்தின்முகமிறுத்தி யுதட்டின்முறைகுதட்ட வருபானங், குடித்துமனமயக்கின் மிகுத்தநகமுறுத்து குறிப்புகள்பலவிழைத்து மடவார்தங், கொழுத்தசுரதசித்ர நலத்திலுருகலுற்ற குணத்தையினியகற்றி யெனையாள்வா, யெடுத்தகுடைநிழற்ற முடித்தமுடிசிறக்க வினத்தினவர்கள் சுற்ற நகரூடே, யிருக்குமரசிருப்பின் மகிழ்ச்சிமருவிமற்று மிதத்தசுகமனைத்து முறநீபோ, யடைத்துமழைதுளித்தல் விடுத்தபொழுதெனக்கு மடுத்தவினைமுடிக்க வருவாயென், றருக்கன்மகனைமிக்க கிருபைக்கொடுவிருப்பி னழைத்துவிடைகொடுத்த பெருமாளே.()

சமரவேல்பொருவஞ்சகலோசன வலையைவீசிவளைந்துபயோதர தாளபூடணகுஞ்சரமேகொடு விழுமோதித், தனிவிசாலசிதம்பமகாரத மெதிர்கடாவிமருங்கினிலோர்சுழி தனிலவிடாமலமிழ்ந்திடவேவிடு மடவார்தம், ப்ரமையிலேதிரிவஞ்சகபாதக னசடன்மூடனிடும்பனடாதுசெய் பிழைபலாகுலசிந்தையவாவினன் வினையேனுன், பெருமையோதியுமன்பர்குலாவிய சபையைநாடியுமிம்பரின் மேவிய பிறவியால்விளையும்பயனைது பெறுவேனோ, ஞிமிறுபாடநெருங்கியகோடலு மினியபாணிவிரிந்திடுவார்சடை நிமலர்சூடிய

கொன்றைகுலாவும்பொ னெதிர்தூவ, நெடியவேலையைமொண்டெழு மேகமும் வெயிலைமூடியிருண்டடர்தாரையி னிரைகளாரமதங்க குலாசல மதனூடே, விமலைசானகியிந்திரைபூமகள் கமலைசீதைத ணங்களுமோதியும் விழியும் யாவுநினைந்துளநீள் புகை யெழுவேவேள், விரையருமலர்சிந்திடவாடை யு முடனுலாவவழுந்திடுமோகன விரக தாபநெடுங்கடலாடிய பெருமாளே. (௨௫)

பயத்தினலஞ்சல்செருக்கு மறப்புமோகம்புரியிச்சை பசித் தல்வாரம்பகைநட்பு நிறைமானம், பழிப்புநேயம்பொறையச்ச மகிழ் ச்சிகோபம்பொருலச்சை பசித்தலாநந்தம்விருப்பு மதிகீழ்மை, நயப் புலோபங்குரூபைதர்க்க முபற்சிஞானந்துயர்பித்த நடுக்குநோயன்பு வெறுத்த லவுதார, நவைக்குரோதந்தெருள்சத்ய மனைத்துமேகொ ண்டவுயிர்க்கு நலக்கமேவந்திடின்முத்தி யருள்வாயே, முபக்குறும ங்கையையுற்று நினைத்தவாறன் றுமுடித்து முடிக்கிரீடந்தலைபெற்று மாசானு, முழுப்ரதாபங்கள்படைத்து மமைச்சரோடும்பதிபுக்குமு தற்பெறுவின்பமிகுத்த சிறியோர்போ, லயர்த்துவாழ்கின்றமயக்க முனக்கிதேனுங்கள்வரத்தை யழிக்குமோரம்புமிருப்ப தறிவாயென், றருக்கன்மாமைந்தனைவெற்றி யிலக்குவாசென்றெரிமைப்பி லழைத் துவாவென்றுவிடுத்த பெருமாளே. (௨௬)

நிறைபொருண்மேல்கவனம்படர்ந்தது வனிதையர்மாகடலி ன்படிந்தது நெடுகுமனைசையெனும்பெருங்கிரி மிசையேறி, நிலையெ னவேயிழிவொன்றிநின்றது மணியணியாடைசுகந்தமென்றிடு நெறி பலவோடியுலைந்தலைந்தது தவிராதே, செறியனபானவிலங்கடைந் தது துயிலெனுநீடிருளின்புகுந்தது சிறுமகவாதரவின்கொடுஞ்சி றை யதனூடே, தினமகலாமலுறைந்திருந்தது வெகுவிதமாகிய சிந்தைமுந்திய தெளிவெனுஞானபதம்பொருந்துவ தொருநாளோ, வுறையுளினூடுபுகுந்துளின்பமும் வரிசையும்வாழ்வுமிகுந்ததஞ்ச மு முயிருடன்யாவும்விரும்பிலென்பிற கினில்வரவென், றுணை ர்வுடனுதாமுந்தவிர்ந்தெழு மிளையபிரானெடுமெந்திரஞ்செறி வுப ரநுமானெடுமங்கனைந்துயிர் தடுமாறிப், பறையறையாமனநின்ற லைந்திட வுரைகுழறுவெயர்வுங்கலந்துமெய் பசையறநீடபயம்புகு ந்திரு பதமீதே, பலபிழைகோடியுமுண்டுசிந்தையி லதுநினையாது கொளென்றுவென்றிகொள் பருதிகுமாரன்வணங்கின்றருள் பெ ருமாளே (௨௭)

கடகரிபகர்ந்தமொழி யுபநிடமுடிந்தவுரை கரைபலகடந்தி டுசொல் ப்ரகலாதன், கனகனொடியம்பியது நிசமுடிவுநின்றுசுகர் க மையொடுவிளம்பியது தெளியாதே, குடிலமுழுவஞ்சகர்க ளவரவ ரறிந்தபடி குணுகுணெனுமந்த்ரமொடு சிலதேவர், குரைகழல்பணி ந்துதொழு தவமிசையின்மங்கவிடு கொடுமையதுகண்டுமன மெலி வேனோ, முடிபுனைசெழும்பரிதி மகனனுமனங்கதனு முதன்மைகள றிந்துசொலு நெடுநீலன், முறுகுதிறலெண்கரசு ததிமுகனொடும்ப னசன் முடுகுகுமுதன்கைகலமு னரணைசெய், யிடபனொடுசங்கன ள னடுதிறன்மயிந்தனட விணையிலிதுமிந்தனிவர், முதலானோ, ரெழுபதுவெளம்படையும் வகைவகைநடந்துவர வினிமையொடுகே ண்டுமகிழ் பெருமாளே. (உ௮)

வாயுவுமொடாதுமுந்து தீயுமுறையாதுமண்டு வாரியலையா தநந்த முகமாகு, மாமறையுநாடிவந்து காணவறியாதுவிஞ்சு மா யையணுகாதுயர்ந்த சுடராகி, நீயொருவனேவிளங்கி நாளுமறியா துநின்ற நீர்மைதனையேயுணர்ந்து தெளியாதே, நீலவிழிமாதருந்தி யானசுழியூடழுந்தி நீணரகிலேபுகுந்து மெலிவேனோ, மேயகதிரா ளிமைந்த னுதியுனைநானடைந்து வேதனைகள்போயிருந்த வரசா ளும், வீறுடையனாகிமங்கை வாழ்வுடையனாகவின்ப மேமருவினே ன்முகுந்த வெனவோதித், தூயவிருதாள்பணிந்து தானடியரோடு மும்பர் சோதியுனதேவலென்கொ லெனவேலாடுஞ், சூழுமெழுதீவு மெங்கு மாமயிலைநாடவின்று தூதுவிடவேணுமென்ற பெருமாளே.

உடுக்கத்துணிவேணுநீள்பசி யவிக்கக்கனபானம்வேணுந லொழுக்கப்புனலாடவேணுமெய் யுறுநோயை, யொழிக்கப்பரிகாரம் வேணுமொர் படுக்கத்தனிவீடுவேணுமுள் ளுருக்கச்சிறுநாரிவேணு மி வகைசேரக், கிடைத்துக்ரகவாசியாகியொர் மயக்கக்கடலாடிநீடி ய கிளைக்குப்பரிவாரனாயுயி ரவமேபோங், கிருபைச்சித்தமுஞான போதமு மழைத்துத்தரவேணுமேலது க்ரகித்துக்கொளவேணுநீய லதிடர்போமோ, குடக்குச்சிலதூதர்தேடுக வடக்குச்சிலதூதர்தே டுக குணக்குச்சிலதூதர்நாடுக வெனவேவிக், குறிப்பிற்குறிகாணுமா ருதி யினித்தெற்குறுதூதுபோவது குணிப்பிற்பிறர்போனபோதினு ம் வசமாமோ, வடற்குத்திரகாரராகிய வரக்கர்க்கிளையாததீரனு மலை க்கப்புறமேகுவீரனு மினிநீயென், றழைத்துத்திருவாழிமோதிர ம

ளித்துத்தன்றேவியாரவ யவத்துக்கடையாளமோதிய பெருமா
ளே. (௩௰)

முகநாலெட்டானமலர்க்கர மதிலேபொற்சேர்கரகப்புனன்
முதுநூல்பற்பாசனமிப்படி நினைவாரு, முடிவேணித்தோலுடைநற்
கர மழுமான்முப்பார்வைவளைக்குழை முனைவேல்வெற்பாசனமிக்கு
றி தெளிவாரும், புகழ்சேர்பொற்பூண்முடிபொற்றிரு வளைநீள்சக்ரா
யுதநற்றுகில் புன்மேனிக்காமர்சதுர்ப்புய மகிழ்வாரும், புறமேசுற்
றேழடியுமெய்த்தகு புகுவாயிற்சார்வதெனத்தெளி பொருளுடிக்கூடு
வதொப்பறு நினையேகாண், மகமீதிற்பூவிலுதித்தவள் பொறையாலி
ப்பூமியையொத்தவண் மதியேயொப்பானமுகத்தவண் முநிவோர்த
ம், மடவாரிற்றேசுபடைத்தவள் சனகேசற்கோர்மகளுத்தமி வரனு
டித்தேடியினிக்கொடு வருவாயென், றகல்வானத்தோர்பிரியப்பட
நெடிதேசுக்ரீவனுவப்புற வடையார்நெட்டூரிலவக்குறி யுள்தாக, வவ
ருருட்பானுவெளிப்பட நமனைவத்துரதருமுற்செல வநுமானைத்தூ
துவிடுத்தருள் பெருமாளே. (௩௧)

சிந்தடி யைந்தடியராகம் வெண்டளைவெண்டுறையுலாவல்
சிந்தைகொள்வஞ்சிகலியாசி ரியமாலை, திண்குறண்மண்டலசொரூ
பம் வெண்கலிபைந்தரவுநேர்மை செந்தொடைசந்தழிவுதாழி சையி
னீதி, யிந்தநெடுஞ்செயுளநேகம் வண்டொடையின்பகுதிமோனை
யின்பமுரண்களொடுபாத மிணைகூழை, யென்பனநின்றகதுவாய்க
ணின்றுவழங்குதமிழ்மாலை யென்றுனதொண்சரணமீது புனைவே
னே, வந்துசெழுந்துணைவரான வங்கதனெண்கரசினோடு மண்டுமி
ரண்டுவெளமான கவியோடு, மஞ்சுறைகுன்றுதொறுமேறி விஞ்சுத
டந்தொறுமுலாவி வன்சுரமுந்துறையுமாறு நெடிதேகி, யந்திநண்
பகலுநாளு மெங்குமிளங்கொடியைநாடி யந்தமில்வெம்பிலமதுடு
மரிதேபோ, யங்கொருபெண்கொடிநலாண்மு னின்றுயிளங்கநும
தேவ னன்புளநெஞ்சிலகலாத பெருமாளே. (௩௨)

அலையாதுநின்றவுயிரோடுடம்பு குறிலேவளர்ந்தநெடிலேகி
ளர்ந்த வளவேவலிந்தவலியோடுமென்சொ லிடைசார்வே, யணிழு
விதங்கொள்பொறியேயிதன்றி நிரைநேரிரண்டுமிருநாலுகொண்ட
வசையேயிதன்றி யியலேவிளங்கு முருவோடே, யுலையாதுநின்ற

பொதுவேயியம்பு தலையேழுபின்பு குறளோடுசிந்து மொழியரத
மைந்தவளவோடுயர்ந்த நெடில்கூடி, யுடனேகழிந்தநெடிலாகவை
ந்து மடியாகவந்ததமிழ்மாலைகொண்டு னுருவேபுனைந்துபெருவாழ்
வையன்றி யறியேனே, பிலமீதுகணடுபெராராமசந்த்ரன் விடுதூத
னென்றுதலைநாளின்முன்பு ஓபறுசாபமென்றுதொழுதேவியந்து த
விராத, பெருவாழ்வுவந்ததெனவேயெழுந்த மடமானிரங்கிவழிமா
றிவந்த பிழைதானுணர்ந்து தரைமேல்பிளந்து செலவேணும், வலி
போர்தொடங்குமெனவேவிளம்பி யவள்போனபின்புசலியாதுநின்
றுவளமாமிரண்டு வெளமானமொய்ம்ப ரனைவோரும், வளர்தோளி
ரண்டினிடைநாலவண்ட முடிபோயுரிஞ்சயிமையோரிறைஞ்ச மலை
போனிமிர்ந்தவநுமான்வணங்கு பெருமானே. (௬௫)

இருகும்பமாகியதனபயோதர முழுவஞ்சலோசனமதுரவர்
சக விருகொந்தளாடவியிளநிலாநகை மடவார்தம், மிடைகண்டுநூ
புரமலறவேவரு நடைகண்டுநாடகமயிலையேநிக ரெழில்கண்டுநாபி
யுமினியரோமமு முடனேகண், டுருகுந்துராகதவிரகபாவியை மு
ழுவஞ்சகாரனைவெகுளியாளனை யுளமுங்கலாகியவசடமூடனை வி
னையேனை, புனதொண்சரோருகசரணமீதினின் மருவும்ப்ரகாரமும
ருளியூழ்வினை யுளதொந்தமாய்கையுமகலவேக்ருபை புரிவாயே, வ
ரைமண்டுகாடுகனெடிதுபோய்விரி திரைமண்டுசாகரமளவுலாயபி
ன் மகவிந்த்ரபூதரசிகரமேவிமெய் தளர்வாகி, வருநண்பர்காளிறை
யவதிகூறிய தொருதிங்களாகியுமனையைநாடவும் வகைகண்டிலோ
மிதுபுகலுநாயக னுழைபோனு, லரசன்கொலாதினிவிடுவனேந
மைமலர்மங்கைகாரணமொருசடாயுவு மருமந்தவானுபர்பதவியேறி
னன் வினையேமு, மரிமந்த்ரமேசொலியுயிரையேவிடி லிடரின்று
போமெனநெடிதுநோவுறு மநுமன்பராவுபரமபதாதிப பெருமாளே.

விடுவிடுவெகங்கடவுளெ னுமடமைகண்கடமை விழிவிழியுக
ந்தெமது வடிவேபார், விபரமிதுமந்த்ரமிது நிலைமையிலுயர்ந்ததிது
வெளியிலொளிர்கின்றதிது தெளிவாபென், றிடர்வினைகளைந்துபெரு
நெறிபுதவியின்பமுட னிகபரமிரண்டுமொரு சமமாகி, யினியநிலை
நின்றுவிட வெனதிடமெழுந்தருளி யெனையடிமைகொண்டருள நி
னைவாயே, நெடியகம்விந்த்ரகிரி பதனிடையிருந்தளவி னிகரிலொரு

தம்பிபடு புகழ்கேளா, நிரைசிறகுவெந்துருகு மெருவையரசன்கதறி நிலையறவுருண்டுவர விவனுரென், றடியெனவெரிந்துபொரு நிருதர்கபடம்புரியு மடைவெனவெருண்டிடலும் வரலாறங், கவனனியியம்பவவனுறு துயர்களைந்துதவு மனுமனையுகந்துடைய பெருமாளே. (௰௫)

பாகுபோலினியதேன்கனியூறுங் கோவைபோலமுதுதேங்கிதழாகும் பானமேபருகியவாஞ்சையினுன்மங் கையராசைப், பாசமீதுபடுமுழங்கன்விர்தாவன் சோரன்மாவிரகன்வீம்புகள்பேசும் பாபசாதிகன்மாந்தனிராவும் பகலுனுந், தாகமோகனபிராந்தியில்விழுந் தீமையானவைபெலாங்கெடவேநின் றாளகளைபரவிவேங்கடமேலங் கதிர்வேலோன், சாதிவானவர்கடாந்தொழநீவண் காளமேகமெனவோங்கியகோலஞ் சாலவேகருதவிங்கொருகாலம் பெறுவேனோ, வேகொளுதகடருண்டுமுனே சிங்காரமாகியமகேந்திரமாகுன் றேறியேகழுகின்வேந்தனை பெநண்பினவன்வாழ, ராமராமவெனமேம்படுநாமங் கூறும்போதுகதிரோன்சுடவேபங் கீறிலாதசிறைதீய்ந்தவெலாம்வந் திடலோடுஞ், சோகமாறியவனைந்திழைபாண்முன் போனவாறுசொலிநீங்கிடவேசந் தோடமாயினியசாம்பவனோடுங் கதனோடுஞ் சூழமேவியுயிர்வாழ்ந்தனமேயென் றோடியாடுமநுமான்றனைநாளுந் தூதனுகவினிதாண்டவனேநம் பெருமாளே. (௰௬)

நீராடுவார்திருமந்த்ரமேசொலி தூநாமமேனியணிந்துளார்சுசி நேரேவிடாதுபொருந்துவார்குருவுபதேச, நேர்பேணுவார்நெறிநின்றுநீள்குறி சார்வாருவார்மலர்கொண்டுநீர்கொடு நீமேவுகோயில்வணங்குவார் நினதடியாரை, யாராதியாயுனதொண்புராணமுமாருதநேபமுநின்ப்ரகாசமு மாலோபமேயறமுந்துகேள்வியி னுணர்வார்முன், னுபாவியேன்மிகுதுன்பமானதி னுடோறும்வீழ்வதுகண்டுமீரமோ டாளாதுநீவிடிலிங்குவேறெனை யறிவார்யா, ராராழிபாதிகடந்துமீனுவ னேர்போவன்மீள்கலனென்று கால்வலியானேனோதாவுமனென்றுதாமுறு குறைகூறி, யாராலிதாகுமிலங்கைபோய்வர நாராயணாருநந்தனுபர மானேய்க்ருபகரசெங்கனுவென வயர்போதி, னீடயிலாததுரந்தராசிவ னேபோலுமாருதியுன்றனுலிதுவேலாததோவெனவெண்கினோரிறை துதிபேச, வீதேதுபாரமிருந்துபாருமின் மாதாவினாருளுண்டொனோர்புரம் யானேகிமீள்குவனென்றமாருதி பெருமாளே. (௰௭)

கிட்கிந்தாகாண்டம் முற்றிற்று.

ஸ்ரீராமதாஸர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

இராமசயம்.

# சுந்தரகாண்டம்.

---

தனியேவந்தனைமங்கையினைத்தன னினிநீயெங்கள்குறுங்கு
டிலிற்புகு தளர்வாறென்றுவிருந்துவிளக்குத லெனவேசெந், தமி
ழேகொண்டுவிளங்குமகப்பொரு ளடைவேவம்பில்விளம்பியுலுத்தர்
க டமையேவிஞ்சுபெருந்தலைமைப்பெய ரதுகூறித், தினமானம்பு
வியெங்குமிரப்பொடு புலவோனென்றுதிரிந்துகருத்துற தெளிவே
யின்றிமயங்குமெனக்கொரு நெறியோதிச், செகழுதண்டமளந்தம
லர்ப்பத மிருபோதுந்தலைகொண்டுதிருப்புகழ் திருநாமஞ்சொலியி
ன்புறவைப்பது மொருநாளோ,* வனமேசென்றுநெடுங்கிரிமற்றுள
திசைபோய்வெங்கடலங்கொருதத்தென மதியாநின்றுகடந்தொராக்
கித னுடல்பீறு, மருவார்வெஞ்சிறையின்கணிருப்பவ ளிருபாதந்
தொழுதிந்தவிலச்சனை யயிலேகொண்டருளென்றுகொடுத்தொரு ம
ணியேகொண், டனைவோரும்படவன்றலைபத்துள நிருதேசன்குல
மைந்தனரைப்புண வவனூர்செந்தழன்மண்டியிடப்பொரு தூடன்
மீளா, வமலாகண்டெனென்வஞ்சியைமற்றென திருதோளின்கணை
ழுந்தருள்தெற்கென வநுமான்வந்ததுகண்டபிரியப்படு பெருமாளே.

தொடைநெகிழ்ந்ததுமாமுரணுனது வழுவிருந்ததுபாரமி
லாதது துறையுடன்பொருள்கோள்விரவாதது தெளியாதே, துணி
பிறந்ததுசோர்வுவிடாதது நெருடுகின்றதுசீருடனேதனை சுலபமி
ன்றிவிர்தாவழிபோனது பழநூலின், படிகடந்ததுபாருபடாதது
கொளகொளென்றதுகோவைபெறாதது பழுதுகொண்டதுநாடவி
லாதது மொழிதானும், பசைவறந்ததுவேறொருநீள்கவி யடியடங்
கிமுனேடுபினுனது பதரிதென்கிலுநாமமிதாகையி னலமாமே, ழ
டிநிமிர்ந்திடவால்விசையோடெழ வுடல்சுருங்கமுனேயிருபாணிப்பு
முடுகிவிஞ்சியரூபமுமேலிட வுயர்வான்மேன், முதுகுரிஞ்சவிடாது

ருகால்களு நடுமுடங்கமெய்மார்புகிரீவமு முறையொடுங்கிடநீள்வி சையானெடு மலையாவு, மடிபறிந்திடமாடயிநாகமு வெளிதெரிந்திட நீர்கிழிபாவரி யரவுதங்கியபாதலமீதுறை பவர்காண, வலைகறங்கிய சிகரமோகர கடல்கடந்திடுவாயுகுமாரனை யடிமைகொண்டவனே சிவனரிய பெருமாளே. (௨)

தேனெய்குறிப்புவெளிப்படை வேறேபிரித்திடுகட்டுரை சிரமெழுத்தொடிலக்கிய முதலாகத், தேர்கோளுமெட்டுமுனெட்டுரு நாலாய்வகுத்துநிறுத்தசொல் சேரேழுதப்பினுமுத்தொகை வருபாலைந், தேனோர்மதித்திடுமெச்சமு நேரானபத்துமொழிந்திடு மேரானமுத்தலமும்பொழு தினசவாகு, மீரார்திணைப்பொருணமுற்செயுள் பாரோர்வழக்கிவைதப்பினு ராமாவெனச்சொலலட்சண கவியாமே, மீனைகதித்துகளித்திடு காராழியைச்சிறுதத்தினில் வீரேடுசித்ரமெனத்தனிகடவாவிண், மீதேநடக்குநடப்பினின் யாமேருவொத்துநடுப்பட மேல்கீழடைத்தவணிற்கையில் வழிநாடித், தானேயரக்கியுடற்றுடல் பிறுவெடுத்துவிசைக்கொடு சார்வானிடைக்கதலிக்கொடி யெழுமாபோற், றூராகணத்தளவுற்றெழு மாமாருதிக்குவிபப்பொடு சாகரவரத்தையளித்தருள் பெருமாளே. (௩)

திரண்டதோர்சூலைகடிவெப்பு முகங்கொளாதேபரபரத்துல் சிலந்திகாமாலையுள்வறட்சி கயரோகஞ், சிரங்குபாய்நீரழிவுகுட்டமுடம்புதேறுவகையிளைப்பு திரங்குநோய்சோகைவிதிர்விப்பு ருதியிலை, மருண்டதோர்வாதமொடுபித்த முடங்கல்சேருனைவெறிபித்து வருந்துமாகோதரமுளைப்பு முதலாக, வரம்பிலாநீள்பிணியினைத்து நிரம்புமாபாதகவுடற்கு மருந்துநீயேயலதுமற்று நினையேனே, புரண்டுமேலாடுமுரகத்தி தனங்களாமேருவிகரத்தில் புகைந்துதீயேயுமிழ்விழிச்சி நிழல்வாரிப், புறங்கள்போவாருயிர்குடிக்க வரங்கொண்மாபூதமடல்வெற்றி பொருந்துமோர் சூலமெடுத்து வருநீலி, யிரண்டுநாலாகியகரத்தி திரண்டநாலாகியமுகத்தி யிருண்டதோராலமெனநிற்கும் வெகுரூபி, யிலங்கைமாதேவியையடர்த்த மடங்கல்போன்மாருதிகருத்தி லிருந்தராமாரகுகுலத்தர் பெருமாளே. (௪)

கவலையுமிருண்டநெஞ்சும் விரகமதமுங்கரந்த களவுமென தென்றுந்தொந்தமிசேருதுங், கபடமுமிடும்பும்விஞ்சு வெகுளியுமிரங்க லும்பொய் கழறலுமயங்குகின்ற மதிதானு, மவலகுணமுந்துளங்கு பயமுமருளுங்குறுமபு மலையுமடியுங்கடுங்கை கீறம்யாவு, மசடுமு ழுதுங்கலந்த வெனதுநிலைகண்டிரங்கி யடிமைகொளவென்றுகந்து வருவாயே, தவமருவிவந்தமங்கை சிறையிடம்விளங்கவென்று த டமதிலிலங்கையின்கணிரவூடே, தனியொரணுவின்கரந்து தெரு வுளதுசென்றபின்பு சயனமதணைந்துவஞ்ச நிருதேச, ரவரவர்கிட ந்தபண்பு முடனினிதுறங்குபெண்க ளடைவுவடிவெண்குணங்கள் குறியாவு, மகமுழுதுமெங்குமெங்கு மிரவிடைபுகுந்துணர்ந்த வநும னையுகந்தவெங்கள் பெருமாளே. (ரு)

வெம்புறுபாழுடம்பு மங்கைவிடாதஙிங்கி விஞ்சியகோல மைந்தர் தமராரோர், வெந்தபிராணனம்பொ னன்பகலாததொண் டர் மிண்டியபூமியிந்த வகையான, சம்பிரமநீள்விலங்கி லிங்கடியே ன்விழுந்து தஞ்சமிலாதுநொந்து விடலாமோ, தண்டுளவோடுகங் கை கொண்டுளபாதமின்று தந்தெனையாளுமன்பு புரிவாயே, வம்ப ர்கள்வாழிலங்கை யிஞ்சிகள்கோபுரங்கள் மன்றுடுவீதிசந்தி புன ல்வாவி, மண்டபம்வாசல்குன்ற ரம்பையராடரங்கு மந்திரசாலைமு ன்பின் முகசாலை, யம்பொனின்மேடைமுன்றி லெங்கும்விடாதுகங் கு லம்புயமேவுகொம்பை நனிதேடு, மஞ்சனைசேயையெங்க ளை ஞ்சிலுளானையென்று மன்புடனோதுகின்ற பெருமாளே. (கூ)

சந்த்ரமுகத்தியர்தங்கள்கொங்கையி லொன்றியிருப்பினும் விஞ்சுபஞ்சணை தங்கிமயக்கமொடங்குறங்கினு மெழுபோதுந், த ண்புனலுங்குள்விழுந்தழுந்தினு மொண்டுகில்சுற்றினுமந்திரங்கொ டு சந்திகழிப்பினும்வந்திடுங்கலை தெரிகாலுங், கொந்தலர்கட்டினுமின் பமுந்திய சந்துதரிக்கினுமுண்டுதின்றிதழ் கொண்டுசுவைத்துவிழு ங்கியின்பொடு பருகாநீர், கும்பிநிறைப்பினுமொன்றியம்பினு மெங் தவிடத்துமெனெஞ்சுநின்கழல் கொண்டுதனித்துநினைந்திடும்பத ம டைவேனோ, விந்திரசித்தையிலங்கையின்படு பஞ்சணையிற்றனிக ண்டுறங்கலி லெந்தையிலக்குவனின்றுணர்ந்துன துடல்பீறி, யெ

ங்குமிழுக்கவுமங்கைகொண்டிரு கண்கள்பறிக்கவுமங்கறைந்துமே
யயென்னைபமுறிக்கவுநுங்குவெங்குரு தியைவாரிச், சிந்தவுமெத்தவுமு
ந்தவும்பொரு தங்கமழிக்கவுமொன்றுமென்றுறு சிந்தைபதைக்க
மொழிந்துமந்திர வகைகநாடிச், செந்திருவைத்தனிகண்டுபின்பொர
வென்றுநினைத்தகல்கின்றவஞ்சனை சிங்கமிகத்தெளிநெஞ்சினின்றிடு
பெருமாளே. (எ)

உம்பர்தொழவருநாராயணாயநம வெம்பெருமவரியேகேச
வாயநம வுண்டவுலகுமிழ்சீமாதவாயநம பிரமாவை, யுந்துமொருதி
ருவாரீசநாபநம முந்துமுரகரியேவாமனாயநம வொண்பரமகுருவே
சீதராயநம ப்ரகலாத, னம்புநரகரியேவாசுதேவநம கம்பமதகரியோ
தாதிமூலநம நந்துகணபணநாகேசசாயிநம சகமாகு, நங்கைமகிழ
ரசேபாபநாசநம வென்றுசொலியுருகாதேவிர்தரமகளிர் நண்பினுரு
குமெனுபாசமோகமது தணியாதே, வெம்புகதிர்மதிபோகாதனூரின்
மிசை கஞ்சமயிலினைபேதேடுபோதிலொலி விஞ்சுகடலெனமாமே
ருவாகுமென வடிவாகி, மிண்டுகணபணிவாயூடுநாசிசெவி மண்டியு
றைதரநேரேசுவாசவிசை வெங்கணிருதரைநூறுருகாதமிசை கொ
டுபோகக், கும்பகருணனிராவோடுநீடுபகலென்று மமளிவிடாதேய
ருதுயில் கொண்டபடியதுகாணுமுன்வாலிபடு கணையாலே, கு
ன்றுமிவனெனவேறேயோர்கோயில்புகு வென்றியநுமனைவீறுகவே
யடிமை கொண்டவுபகிடமோதாதியேபெரிய பெருமாளே. (அ)

நடையுற்றதுமூதுரையானது பொருள்பெற்றதுகோவை
கெடாதது நலமிக்கதுசீர்குலையாதது வெளிறுதே, நசைபற்றியவோ
சையின்மெயது பிறர்சொற்றிருடாததுமேலது நழுவுற்றிளகாதது
நீடிய துறைதோறு, மிடறற்றுமாசுபடாதது தெளியப்படுநேரது
மானவரிதயத்துமுலாவியபாவது பலநாவு, மெடுபட்டதுசாரமெ
லாமுள கவிலட்சணமாகிலுநாரண ரகுவித்தகராமவெனுவிடி னல
மாமே, கடல்சுற்றியவூரிரவோடொரு ரமையைத்தனிதேடுறுபோ
தெதிர் கனலொத்தவிராவணனூர் துயில் வகைகாணுக், கறுவித்கர
மேலிசையாவிழி யனல்கக்கிடமேல்விழுவேன்முது கழுகுக்கிடுவே
னிவனீடெ லுயிர்நாடி, யடியிற்கொடுசேருவென்மாமுடி யொருபத்த

றமோதுவன்வீசுவ னகலத்திடைபாய்வனெனுவெழு சினமாறு, வ
மலக்கணையால்வினையாடவு மிசைசிறக்கவும்வேணுமெனுவரு வநுமப்
ரியராகவவானவர் பெருமாளே. (௯)

நீடியகலைகளோவநந்தம் யாவையுமுணரவோவிரும்பி னீடி
யவயது நூறதென்ப ரதிலேதாய், நீர்புகுமுதரமீதிருந்து மேலொரு
மதலையாகிவந்து நேரிழைமகளிர்பாலுழன்று மறிவேபோ, யூடிரவ
ணையிலே துயின்று நோயொடுபசியுமாய்மெலிந்து வோடியநரையி
லேதளர்ந்து வுடல்போமென், றாதியமிதுவெனுநினைந்து நாமமுமி
சையுமேவிளம்பி யூழ்வினைதொடர்பிலாவைகுந்த மடைவேனோ,
வேடவிழ்குழலைநாடுகின்ற பாயிருளதனிலேயிலங்கை ராவணன்மு
தலினோர்குணங்கண் மருவாதே, யாகமுமனலுமோமமுண்ட சாலை
யுநெறியுமூறுமன்பு மேசறுதவமுநீதிகொண்ட வறனோடும், வீடண
னொருவன்வாழ்தல்கண்டு சானகிவருடுதாளில்வந்து மேவுவனிவனெ
னுவுகந்து விடியாமுன், வேறொருமனையிலேபுகுந்த தூதுவனநும
ன்வீதலின்றி வேதமுளளவும்வாழவென்ற பெருமாளே. (௰)

பூதகணங்கள்வேதாளமொடந்தர வாசிகளண்டரேதானவ
ர்விஞ்சுத போதனர்வென்றிசூர்மாசுணர்கந்தர்வர் முதல்வானோர்,
பூமிபொருந்திவாழ்மானுடர்மங்கையர் கானவிலங்குவானூடுபறந்தெ
ழு போதமில்வெம்புளேயூர்வனநந்துகள் புனல்வாழுஞ், சாதிமரங்
களேதூறுபடும்புதனீள் கொடிமென்புல்பேராதுயர்குன்றுசராச
ரமெங்குமேபோகபிறந்திரு வினையாலே, சாடுறுமிந்தநோய்போது
மெலிந்தனனேநமரங்கநாராயணவென்றிரு தாளிலடைந்துமேலா
கும்வைகுந்தம தடைவேனோ, பாதிநடந்ததோர்காரிருளின்கடல் சூ
ழுமிலங்கைமீதேயுளமங்கையர் பார்வைமுகங்கள்வாய்நாசிநெடுங்கு
ழை நுதலோதி, பாதமருங்குதோண்மாமுலையுந்தியு ரோமமடங்க
வேவேறுதெரிந்திட பார்மகளன்றெனுநாடியுடம்புட னுயிர்போ
லே, மாதெருவொன்றுநூறுயிரமென்பத னோடிரண்டுநூறுயிர
முஞ்சிறு மால்வடிவங்கொடேதேடியணங்கினை வெளிகாணுன், வா
டிமெலிந்துசீராமசயந்திரு வேதுணையென்றசோகாடவியின்புகு மா
ருதிதம்பிரானேயுலகந்தொழு பெருமாளே. (௰௧)

ஒழுங்கொருகிஞ்சிலுமின்றி யிணங்கிகள்கொண்டிகள்வம்பி
லுறங்கிகள்தொண்டுகளன்பு புரிவார்போ, லொடுங்கிகள்சண்டைக
ள்கொண்டு பிணங்கிகள்வெங்கிழிகொண்ட வுடம்பிகள்கொஞ்சிக
ணைஞ்சின் முலைசேர, மழுங்கிகள்பின்செலவந்து தொடங்கிகள்
செம்பொருளின்கண் மயங்கிகடங்களொடொன்றி வசமாகி, மரு
ண்டுபுரண்டுதுவண்டு திரிந்திடுசிந்தைதிரும்பி வரம்பெறுமன்ப
ரொடென்று பயில்வேனோ, மொழிந்தவிலங்கையடங்கவலைந்துநி
லைந்தலைவெயொன்று முடிந்திடலின்றிமெலிந்து தளர்போதின், முக
ம்பெறவந்தொருதந்தை புகுந்திடுபண்பெனமன்றன் முகந்துவழங்
கியொழுங்கு மறுகூடே, யெழுந்தொருதென்றலசைந்து நடந்த
துகண்டுதெளிந்தொ ரிரும்பொழிலுண்டெனவந்த வழியேபோ, யி
ளங்கொடிதன்செயன்முந்த வறிந்திடவென்றெருகொம்பி லிருந்தவ
ளெஞ்சிலிருந்த பெருமாளே. (௰௨)

கோதையருக்குமுழுமோகமாகியும் வேளைகள்புக்குமணியா
ழிமேகலை கூறைகொடுத்துமினிதான தூதுக ணைடிதேவிக் கூடிய
ணைத்துமுயிரேகமாகியும் வேறுபடுத்தலறமேவுநாண்மிசை கோல
மிகுத்தபொருள்வேணுமேயென நெறிபோயு, மாதரவுற்றபிரிவான
வேதனை சாலவருத்தவதிலேதளாடியு மாரொருவர்க்குமனநாணமே
யற விடஞறி, யாசைவலைக்குள் விழுபாவியாய்வெறு பாழிலுழைக்குமு
டியேனையினியாளநினைத்துனிருபாதமேதர வருள்கூராய், மாத
ரெடுத்தவொளிதீபமாலிகை யாகவடைப்பையுடையாடைசாமரை
வாள்கொடுசுற்றும்வரவீணைவார்குழ லிசைபாட, மாமதுரப்பெண
முதாருநீள்பொழில் பாதியிருட்குணிருதேசன்மேவியுன் வாழ்வுமதி
ப்புமதிருபசோதியும் வளமாகச், சாதமிகுத்தகனிமூலசாகைகள் யா
வும்வயிற்றின்வனவாசிவேறொரு சார்பிலியிச்சைவிடுபோதுவாயெ
னமொழிபோதுஞ், சானகிகற்புநிலைபேதியாநெறி தானறிவுற்றுமகி
ழ்வாகுமாருதி சாவறவைத்தவபிராமனேசுரர் பெருமாளே. (௰௩)

ஆனையதன்மேலிருந்து பேரிகையெலாமுழங்க வாபரண
மேலிலங்க மடவார்கின், ருடல்புரியாவிளங்க வீணையொடுகீதம்வ
ந்த வாரமுதுபோலமுந்து செவிமூழ்க, தானைசுரர்சூழவிம்ப மான

குடைநீழன் மண்டு சாமரைகள்வீசவிந்த்ர னுறுவாழ்வுஞ், சதுர் முகன்வாழ்வுநந்தி வாழ்வுநினையேனரங்க தாமமகலாதவின்ப முறு வேனோ, மானமறவோதுகின்ற ராவணன்விகாரசிந்தை வாடியிட வோர்துரும்பை யெதிர்பாரா, மானவனிராமனம்பை நீயறிகிலாயு ன்வஞ்ச வாழ்வுநிலையோவிலங்கை பொடியாகச், சேனையொடுநீது ணிந்து போரைவைகெடுவாய்புரிந்த தீமையிதுபோதுமென்ற வுரைகே ளாச், சீதையிவளாகுமென்று தேறுமநுமானைநன்று சேவடியிலாளு கின்ற பெருமாளே. (௰௪)

நிபுணிதவளகமலாசனத்தி கருணைவடிவிலதிராசதத்தி நிக ரிலறுபதுடனுலாவித்தை தருதேவி, நிமலைவிமலையுலகேழுபெற்ற முதல்விபிறைவிவெகுவேதமிட்ட நிழலிகுழலினுபர்வாசகத்தி கவி வாணி, விபுதர்பரவுமொருசாரண தப்பொனுரியபிரமர்திருநாவகத்தி வெளியிலொளியிலுறுமூலசத்தி யபிராமி, விரவுமனகமலசீதளத்தி யறிவுநிறையுமொருபாரதிப்பெண் விழியினருள்கொடுனையேதுதிப் ப தொழியேனே, யபயனிளவலிடுசாலைவைப்பு நிருதர்மகளிர்புடை சூழ்வளைப்பு மருகுதிரிசடையுயிர்வாடுநட்பு மிடையேநோந், தழியு மனமுமிடைபோலிளைத்த வடிவுமிடையிலுரிசீரைசுற்று மரையுமு ரையுமகலாவுயிர்ப்பு நிரைசேரு முபயதனமுமதின்மேலொழுக்கு ந யனபுனலுமசையாதிருப்பு மொழிபுமழகுமுடல்சேரழுக்கு மிரவே கண், டுறுதிசனகியிவளேயெனத்த னறிவிலறியுமநுமானைமுற்று முரியவடிமையெனவேபடைத்த பெருமாளே. (௰௫)

நெஞ்சுதந்தனனுனதடிநினைவுற வந்தைதந்தனன்மலரொடு புனலிட நின்பெரும்புகழ்பரவிடவுதவின னொருநாவு, நிந்தையொ ன்றறவுடலினையருளினன் வந்திறைஞ்சியுனறிகுறிசெறிவுற நின்று சந்ததம்வலம்வரநிறுவின னிருகாலு, மஞ்சனந்திகழ்வடிவதுதெரிய வும் விஞ்சுநின்பெயரிசையதுபருகவு மன்றுகண்டனன்விழியொடு செவிகளு மலர்மேலா, மந்தணன்செழுமுதவியையெவர்செய்வ ரெயு ங்கடஞ்சமதுளவெளிலெழுமையு மங்கவன்பதமொழிவறநிலைபெற வருள்வாயே, வஞ்சியிங்கொருகனவதிசயமுள வங்கதன்பயனறிகு றியுனைமகிழ் மங்கலம்புனையிறைவனுமிளவலும் விடுதூதன், வந்தி

றைஞ்சுவனவனிலைபுகலுவனிங்கிலங்கையுமனல்படமுடுகுவன் மைந்தர்திங்களின்மருவுவர்சிறைவிடு மெனவோதிக், கஞ்சமங்கையையிலகியசனகியை யஞ்சலென்றுருதிரிசடைதொழுதிரு கண்டுயின்றருளெனவவரிருவரு முறுநயங், கங்குலென் றுசிறுவடிவினிலெடிதொரு கொம்பரின்புடைமருவினன் மதியொடு கண்டிருந்துளவநுமனையுடையதொர் பெருமாளே. (௰௬)

மூவுலகெலாமளந்து வேதமுடிவாகிநின்று மோதுதிரைவீசுகங்கை யிடமாகி, மூலமுதலாகவிஞ்சுபார்மகள்விடாதுகொண்டு மூதறிவினால்வணங்கி யகலாத, சேவடிகளைநினைந்து நீடுபுகழ்பாடு மன்பர் சேவைபுரியாதுநின்றவடியேனைத், தியவர்கள்வாசலின்கண் மாவறுமைபேசிநின்று தேகியெனநீதுறந்து விடுவாயோ, காவினிடையேயிருண்ட மாயிருளிலேநடந்த காதகனிராவணன்சொ லனல்போலே, காயவுடல்போதவெம்பி நாயகிபொருதுலைந்து காவல்புரி மாதர்கொண்ட துயினாடி, யாவிவிடவேணுமென்று தீரநினையாவெழுந்த வாகுலமெலாமறிந்து வெளிபாதற, கானதிதுகாலமெனப தோருமநுமானையன்பி னார்வமொடுதூதுகொண்ட பெருமாளே. ()

நீதானேமாயையின்மூடுவை யூடேபோர்ஞானமும்வீசுவை நேர்போலேலீலைகளானவை வெகுவாக, நேடாதேயாடுவைபாசையினோபனாலோர்செயல்வேறிலை நோநீடேறினும்வீழினு முனதேகாண், தாதார்பூமாலைகளைகொடு சூடாவேதாமுதலாகிய தார்வானோர் நாடொறுமேதொழு மிருதாளிற, சார்வேயாய்மாயையிலாதிரு நாடேபோமேன்மையதாகிலை தானேநீயிகிறபேறது பெறுவேனோபோதாதோவாருயிர்வாழ்வது ராமாநீவாழியெனுநனி போதாவோர்நீள்கொடிமாமிட றொடுசேராப், பூமேலாள்கீழறநாடுறு நேர்காணுமாமயிலேபொறு பூணைபாராழியிதோதிரு வடையாள, மாதாவேயாவிவிடாதொழி தூதேயாய்ராமபிரானெனை வாநீபோய்மீள்கெனவேவின னெனநாமம், வாய்மாறுதோதிமுனேவரு சீமானார்மாருதியார்பெறு வாழ்வேசீராகவனேசுரர் பெருமாளே. (௰௮)

மந்தரபாரதுங்க குங்குமராகவிம்ப மங்கலகோமளங்கொண் முலைமானர், வஞ்சகலீலையின்க ணொஞ்சுறவேவிழுந்து மங்கிவிடாதுசெம்பொ னடிமீதே, சிந்தையுலாவல்கொண்டு பண்புடனேபுரிந்து செந்தமிழ்பாடியன்பு தவிராதே, தென்புலம்யாவும்வென்று பின்பிறவாதுயர்ந்த செந்திருவாழ்வைசுந்த மடைவேனோ, சந்தயமாகிநின்று கங்குலின்மீதுவந்து தஞ்சமிலாதுவெம்பி யுரவோய்நீ. தந்திடுவாய்மைநம்ப நின்பெயரேதுதங்கு தண்பதியேதுவிஞ்சு கடருவி, வந்திடுகோலமென்கொ லென்றநுமானையன்று வஞ்சமெனாநினைந்து தனியூடே, வண்டுறைசோலையின்க ணின்றுதளாடுகஞ்ச மங்கையைமார்புகொண்ட பெருமாளே. (௰௯)

வாழ்வறுதேவருமிந்த்ர னுன்முகனீசனும்வந்து வாவென்றுபூமிபடங்க வசுரேசர். வாதைகளானதுபண்டைநான்மறைவேள்விகுலைந்து மாதவம்யாவுமழிந்து மெலிவானே, மாழியனேசரனென்ற பேரதொருரூபமடைந்து வார்கலிசூழ்புவியின்கண் விளையாடி, யாரண்மாதருமங்க ணீநிலைகாணும்வரம்பை யாரறிவாரதறிந்து தெளிவேனோ, தாழ்வறவேயுயிரன்று தான்விடவேநினைகின்ற சானகிகூறியசெஞ்சொ லதுகேளாத், தாயினிநீதெளிபண்டை ராசியமேவுளதெந்தை சாமளமேனிகுணங்கள் புகல்வென்முன், சூழ்கடருவிநடந்த கோலமும்வேறினிதுண்டு சோதிகையாழியும்வந்த திவையாவுஞ், சூதலகாணெனைநம்பு நானநுமானெனநின்ற தூதனைநாளுமுகந்த பெருமாளே, (௨௰)

சோகமிகுந்துவருவார்விரும்ப வாழ்வுமிருந்துமுத்வர்துயண்டு சூதுமிடும்புமகலாதுவிஞ்சு புகழாகுஞ், சோதியலங்கல்புனையாதுவந்து கோயிலரங்கமொருநாள்மர்ந்து தூயதவங்கள்புரியாது வஞ்ச வடிவாகு, மாகமிருந்துபயனேதுகண்கள் வாய்செவிதுண்டமுதலானவிந்த்ரிய வாதிகடங்களதிகாரமின்றி யடியேனு, லானசுதந்த்ரமிலைகாணிறந்து மீளவுமவந்துமுதலேபயின்ற வுடல்புரிந்து புறமேயுழன்று திரிவேனோ, வரகைமிகுந்தவொருநீகுரங்கு பாவியிலங்கைநகர்மீதுவந்து மாதவனும்பர்பெருமானரங்க னடையாள, வாய்மைமொழிந்தெனுயிரேபுரந்த சாதுரியங்களிவைபோதுமுந்தி மாயமிதென்றுதெளியாதசிந்தை தெளிவாகச், சாகரமெங்குநெடிதே

தரங்க வோசையெழும்பவிசையோடெழுந்து தாரகையண்டமுது கூடுரிஞ்ச வநுமானீ, தாவிநடந்தவெழில்காணவின்று வேணுமெனுஞ்சொலுரையாடுகின்ற சானகிநெஞ்சிலகலாதுநின்ற பெருமாளே. (உக)

வாங்குகடலோதமோதிமேலிட வோங்குநெடுமேருநேருலாவ மாண்டகயிறுகநாகம்வாய்விட நடுவேநீ, வாய்ந்தவவதாரவாமையானது தாங்கவுளமீதுசாதமாகிய வான்குலவுமேசாமனுனைதோர்தறி நிலையாக, வேங்கியிளையாதுமாசுராசுரர் தாங்கடையுநாளில்வாணகூடமு மேந்துகிரியாவும்வேகவேகம துடனேவந், தீண்டியதொராலகாலமாமெனநீண்டுகுழையூடுதாவும்வேல்விழி யேந்திழைநலார்கண்மோகவிலையி லுழல்வேனோ, பூங்கமலையேவைதேகியேழுல கின்றதிருவேபமோகியேமயில் போன்றுசிறையூடுகாவிலேயொளிர்மணியேபார், போந்தவெனதாடல்வேடமீதென வான்றபுவிதாவுசோதிபோல்விரல் பூண்டவடிபூமிநாடமேலெழில் தெரியாவா, ருங்கமலவேதனுடுமாமுடி தாங்கவொளிமேவுதாரகாகண மார்ந்ததலைமாலைபோலநால விண்வெளிமூட, வாங்கொர்கயிலாயபேருவாமென நீண்டவநுமானைவானுளோர்தொழ வாண்டரகுவீரகோயின்மேவிய பெருமாளே. (உஉ)

அடிமையுரியபெரியோர்களிங்கு வருகவருகவெனவேவிளம்புமரியதருமநெடிதேயுகந்து துணையாக, வவலமகலமரபாகிவந்த குலமுமொழியமறைநூன்மொழிந்த வடைவின்வடிவினுனதாறிரண்டு திருநாம, நெடிதுதிகழவரிராமசந்த்ர பரமபுருடக்ருபையாளவிஞ்சு நிருதர்தமதுகுலகாலவென்று புகழ்பாடி, நிறையநறைகொண்மலர்நீர்பொழிந்து சுருதிபரவுமுயர்கோயிலின்க ணினதுகரியதிருமேனிகண்டு தொழுவேனோ, கொடிதுகொடிதுநெடுவாயுமைந்த வமையுமமையுமதிருபம்வந்து குறுகுகுறுகுநெடில்காணவின்று வசமோவென், குறைகடவிரவினிநீயடங்கு பிரமபதவிபெறுவாய்பிரிந்த குரிசில்குணமுமடையாளமுஞ்சொ லெனவோதிக், கடினபுளகமுலைபிறங்க விழியிலொழுகுபுனன்மாறநின்ற கருணைமுதல்வியாருபேதைமங்கை தவமேசெய், கருதுவிரதமுடையோரையெண்கணயனரன்முதலியாராசெய்விந்தை கமலைசனகியலர்மேன்மடந்தை பெருமாளே. (உங)

சதிராகவர்ழவுங்கயறகண் மடவாரைமேவவுங்களித்து த
ருபாலர்பேறுடன்றஷைழத்து வரவேயுங், தனபாலனுகவுஞ்சிறக்க வ
ணிகோடிபூணவும்ப்ரபுக்க டலைவாசன்மீதுவந்திருக்க விசைவாணர்,
துதிகேள்விகூறவுங்கதித்த நறைமாலைசூடவுந்திருத்து சுவையோ
டுபோனகம்புசித்து நலமாகத், துயில்பாயல்சேரவும்பெருத்த நினை
வானபாழ்மனம்பசுத்த துளவேறுபாதபங்கயத்தை நினையாதோ,
வெதிரேநிலாதுடம்பொடுக்கி யொருபாணிவாய்மூகம்புதைப்ப விரு
பாதமேவணங்கியச்ச மொடுசிதை, யினிவாழிவாழியென்றுமற்று
மலர்நாபிமார்புகண்டய்வச்ர விணைவாகுதூணிவண்சிலைக்கை யுட
னோதா, ளதிரூபரேகைசந்த்ரவட்ட வதனபிராமமஞ்சையொத்த
வழகானமேனிசெங்கண்முற்று மூளதான, வடையாளம்யாவுநின்
றுசெப்பி மணியாழிதானுகந்தெடுத்த வநுமானையாளவந்துதித்த
பெருமாளே. (உச)

பூவில்விரிஞ்சனுமாலுய்வெண்கயி லாயமுறுஞ்சிவனையாய்
நின்றனை போகபுரந்தரமாருபங்கொடு தருநீழல், போதவுறைந்தனை
மூவாவண்டர்க ளாகிவிளங்கினைநேரேபணபொடு பூதமொரைந்தெ
னவூடேதங்கினை யுயிர்யாவு, மேவியமர்ந்தனையீவோனும்பெறு வோ
னுமிடும்பொருளேதேனுந்தனி வேறுபகர்ந்திடுநேராய்நின்றனை வெ
குமாயம், வீறியநின்செயலாரேகண்டவர் நானறியுந்தரமோமோரங்க
விமானமுறைந்திடுநீயேயென்குறை களைவாயே, காவிடைகங்குலி
ன்மீதேவந்தது நீடியசந்தயமாயேநின்றவள் காதலுடன்றெளிவாயே ய
யின்புற விருள்கீறக், காரிகைகண்களிகூராமென்புனல் சோர்வுறவு
ங்குழைநாலுயென்பிழை காணலையிங்கநுமானேயென்றுரை பலகூ
றி, யாவிகுளிர்ந்திடவாறேருந்தொழ நாயகிகண்டருளாயேகண்ட
ருளாயிழைகண்டருள்சீதாய்கண்டரு ளெனவேபொன், றூழிவழங்
கியமாதூதன்கவி ராசன்விளங்கியபேராளன்றனை யாளுடையெம்
பெருமானேயண்டர்கள் பெருமாளே. (உரு)

என்றுமுளசெங்கதிரிந்து நண்பழல்குசன்கதிர்புந்தி யிந்தி
ரன்மகிழ்ந்திடுமெந்த்ரி யசுரேச, னின்புறவிளங்குபவிங்கு மந்தனொ
டிரண்டுபுயங்க ரெண்கொளுடுவின்கணமுந்து தவவாறே, ரொன்
றியவிடங்களடங்க நன்றியிலையென்கிலுமந்த வொன்பதுக்ரகங்களு

மங்குறனினுரு, மொண்டிறவிடந்தனில்வந்துநின் றுதவுகின்றதொ ரின்ப முன்பதனினைந்திட வென்று முளதாமே, துன்றுகடலெழும்வளைந்த திந்தவினைதங்குமிலங்கை துங்கமதிலண்டமுரிஞ்சு முதுகாவற், றொந்தமுமனந்தமுமடங்க வின்றொருகுரங்குகடந்து தொண்டுசெயல்வஞ்சனையென்று மலர்மாது, நின்றுதளர்கின்றதுகண்டு வென்றியநுமன் கைகுவிந்து நின்கைபிடியென்றுவழங்கு திருவாழி, நிந்தையறநண்பொடுகண்டு பின்பவனுகந்துதெளிந்த நெஞ்சுமுழுதுந்நிறைகொண்ட பெருமாளே. (உசு)

நினைத்ததேநினைத்துமயங்கி யுரைத்ததேயுரைத்துமருண்டு நிலைத்ததேநிலைத்தெரிகும்பி பசிதிர, நிறைத்ததேநிறைத்துமருங்கிலுடுத்ததேயுடுத்துமுழன்று நிகழ்த்ததேநிகழ்த்தியிறந்து சகமீதிற், செனித்ததேசெனித்துவிரிஞ்சன் விதித்தநாளகற்றியுழன்று செயற்கையாலியற்கையிலொன்று நிலைகாணேன், றிருத்திநீயழைத்து நின்மந்த்ர வசத்திலேநிறுத்தியுயர்ந்த திருச்சரோருகப்பதமென்று தருவாயே, தனித்திராவிளிற்கவிவந்து கொடுத்தமோதிரத்தினையங்கை தரித்துலோசனத்திடைகொண்டு துயராறித், தனத்திலேயணைத்துமலர்ந்த முகத்திலேயழுத்திவிளங்கு தலைக்குமேலிருத்தியுகந்து திசைநாடி, வனத்திலேவிடுத்துநடந்த பதத்தைமார்பகத்தையிரண்டு மணிப்புயாசலத்தைபொரம்பை மதியார்மேல், வணக்குவார்தனுத்தனைமஞ்சு நிகர்த்தமேனியைத்தொழுகின்ற மனத்துமோகனத்திருமங்கை பெருமாளே. (உஎ)

தாரரனதுகட்டிமுற்றுநிரம்பிய நீரானதுகொட்டியர்ச்சனையுஞ்செய்து சார்வாயடிமைத்தொழிற்படுகின்றன ரறிவாளர், சாகாவரமுற்றதொத்துயிடும்புடன் மாமாதரைநத்திமெத்தியவஞ்சனை தானேயுலகத்தியற்றியுலைந்தனன் வினையென்யா, ஞாய்வுறிலிப்படிக்கிலைகண்டவர் வேறுருவைவிட்டதிப்பொழுதொன்றிலை யாமேயினிமற்றெனக்கொருசிந்தையு முளதாமோ, வாகாநெறியிற்செலுத்தினுமங்கது போகாவழியிற் புகுத்தியுகந்தெனை யாளாமெனவுட்படுத்தினுநின்றிரு வருளேகா, ணோரார்பதியிற்சிறைக்குளிருந்தது தீராதலவெற்றைப்பொத்தபுயங்கொடு நீயேவகையிட்டகற்றுவைபெண்கிலுழுதிவீரா, சேராகரனைத்துணித்தசரங்கொடு மாராவணனைப்புபத்

தொடுவென்சிர நீறுய்யிழவிட்டறுத்தபினிங்குற வருவேன்யான்,
றோராவிறைவர்க்குரைத்தொருதிங்களிலே வாவுயிர்வைத்திருப்பன்
விளம்பிய சூளானதுதப்பின்மற்றுயிர்பொன்றுவ னெனவோதித்
தூதாபரதற்களித்தவலங்கிர்த தாளார்கமலத்தில்வைத்தருளென்
றொரு சூளாமணியைக்கொடுத்தவளின்புற பெருமாளே. (உஅ)

சேர்வனத்திலியங்கினுமொண்புன லூடுநித்தம்வளைந்துபடி
ந்துயர் தேகசுத்திபுரிந்திடினுந்தலை யதுகீழாய்த், தீநடுப்படநின்றி
டினுங்குகை யூடிருப்பினுமுண்டிவிரும்புத றீதெனத்தவிர்சிந்தை
பொருந்தினு முடைதானு, சேர்விடுப்பினுமிங்கிதமொன்றற மோன
முற்றிடுபெண்புதுடங்கினு நீடிருட்பகல்கொண்டுவழங்கினு முளமீ
தே, நீணிலத்தையளந்தசெழும்பத மேபதித்திடினங்கதுநன்றுநி
ராசையுற்றவரென்செயினும்பழு துளதாமே, சார்வுபெற்றசெழுந்
திருவின்க்ருபை யால்விடைக்கொடுமந்திரசிந்தனை தான்மிகுத்துந
டந்துநறும்பொழில் பொடியாகத், தாவிலெற்றியெதிர்ந்திடுகண்டக
ராவிசெற்றுவெகுண்டிடசென்றவர் தாமுரைக்கவறிந்தரசன்படை
யெதிர்போதிற், றோர்வியற்றவிலங்கையில்வஞ்சகர் விரமுற்றும்வி
ளங்கவும்வந்துள தூதுரைக்கவும்வென்றிபொருந்தவு சினமேவயாய
த், தோள்புடைத்துநெருங்கிவருங்கொலை வாளரக்கர்பயங்கரனென்
றொரு தோரணத்திலிருந்தவனின்புற பெருமாளே. (உகூ)

முட்டமுட்டவருக்கிகள்கண்கொடு மெத்தமெத்தவுருக்கிக
ள்வஞ்சனை முறபடித்தசமர்த்திகள்விஞ்சிய நகரேகை, மொய்த்தி
ருக்குமுலைச்சியர்குங்கும பொட்டுநெற்றியர்கெட்ட வசங்கிகண் முத்
தெனத்தெரிபற்களரங்கொடு கடையாமே, விட்டபற்கறைகட்டுமிடு
ம்பிக ளத்தலைக்கடைபற்றிநிரந்தரம் லச்சைசற்றறநிற்பவரங்கொ
ரு கதவூடே, யெட்டியெட்டிமுகக்குறிதந்துபி னக்கணத்துமறைப்
பவர்செம்பொரு ளிச்சையுற்றபரத்தையர்சிங்கியி லுழல்வேனோ, வ
ட்டமுற்றமதிற்குளிலங்கையு மச்சமுற்றுநெளிக்கவணங்கினை வைப்
புறச்சிறைவைத்தவனுந் தலைநடுமாற, மற்கடத்தைமுடிக்கவுநின்
றெதிர் விட்டவிட்டபடைத்திரள்வந்தவர் மற்றுமுற்றவர்கெட்டகு
ணங்களி னிருதேசர், பட்டிடக்கரிபொட்டெழவஞ்சக துட்டர்கெட்
டுவெருக்கொளவெங்கடல் பச்சிரத்தநதிக்குணமயங்குற வனைவோ

ரும், பற்றுவிட்டுவெருக்கொடுசிந்துற வெற்றியுறறவொருத்தனையன்
புசெய் பத்தருக்குண்முன்வைத்துமகிழ்ந்தருள் பெருமாளே. (௩௰)

கொண்டையானதுசரிந்துகுலைந்திட வம்பொறுடையுமகன்
றிடமந்தர கொங்கையானைகளழுந்தியுரம்பொர முழுநீலங், கொண்
டவேல்விழிசிவந்துநெடுங்குழை சென்றுலாவவுடலெங்குமிரம்பிய
குங்குமாருணவலங்க்ருதசந்தன மழிவாகத், தொண்டைவாய்வெளி
றவங்குவளைந்திரு செங்கைதானிறுகவண்டுசிலம்புக டொந்தமான
வொலிபம்பரிதம்பழும் வெளிகாணத், துங்கமாமதனிங்கிதரஞ்சனை
நண்பினோடுபுணர்வஞ்சியர்தஞ்சிறு தொண்டனேனினியுனெண்சர
ணந்தொழ வமைபாதோ, மண்டுதோரணமிருந்துபெயர்ந்துமு னி
ந்த்ரசாலமெனமுந்தியெழுந்துபர் மஞ்சுகீறிடவளர்ந்துகரங்கொடு
பரிதோரான், வந்தமாகரிபிசைந்துநடந்திர தங்கள்போய்விழவெறிந்
துவுரந்தரு மந்தவாலிடைநெருங்கவிலங்கையு ளடல்வீரர், சண்டி
யேயெதிர்நடந்தவர்கண்கெட மிண்டுதோணரியவங்கமிழந்தொரு
சந்தமாயுடல்குழம்பிவழும்புற முடிவீழச், சந்துபோகவுடல்புண்ப
டவிண்பட வங்கைகாலொடியவுந்தியெறிந்தொரு சம்புமாலியுயிரு
ண்டவர்தொண்டுசெய் பெருமாளே. (௩௧)

வந்துசூழ்தீவினைபொடிபட வங்கமோதேசொடுபொலிவுற
வண்டுசேர்மாலையுமுடியுந லெழில்கூர, மண்டியேயாளிதமிர்கமத
சந்துமேலேபரிமளமெழ மன்றல்கூர்மாசறுதுகிலுட னணியாவுந்,
தந்துசீர்பேணுவைநறுநெய் மந்தராசனமொடறுசுவை தங்கவேபா
லுணவுதவுவை சுகம்பாவுந், தஞ்சமாயேயினிதருளுவை யன்பரீடே
றுகைநினைவுறு தம்பிரானீயலதொருவர்பி னுளராமோ, முந்தவே
தோரணமிசையொரு சிங்கமேபோலெதிரதிர்தர முண்டமாயேவி
ழமுடுகியு நெடுவாலான், முன்பினோடாவகைப்படையணி யெங்குமே
கோலியுமுடிதொறு மொய்ம்பினுல்வானிடிநிகரென வெதிர்தாவிப்,
பந்திசேர்கோபுரவெழுவினை யங்கைமீதேகொடுநிசிசரர் பங்கமாய்
நீறெழ வதிவித வமராடிப், பஞ்சசேனைபதியவர்களை நெஞ்சின்மோ
தாவுயிர்பருகிய பண்புசேர்மாருதிதொழவரு பெருமாளே. (௩௨)

கோளர்வஞ்சகருபாயநிரம்பிய சூதர்கண்டகர்விரோதரிடும்
பினர் கூழர்துண்டர்கொலைகாரர்கடுங்கையர் நெடுமோகங், கூருகி

ன்றவர்வியாகுலசிந்தையர் மூடர்நன்றியறியாதவர்வெம்பழி கூறுமி ண்டர்கைபெழாதவழங்கலர் தமைநாளும், வேளுமிந்திரனுமாமென வுங்கொடை நீடுமைந்தருவுமாமணியுங்குளிர் மேகமுஞ்சமமெனுமு துவண்டமிழ் கொடுபாடி, வீணிலென்பொழுதுபோனதுகண்டனை போதுநின்கமலபாதநினைந்திட வேணுமிங்குனதுமாயைதெளிந்திட வருள்வாயே, தாளொடுங்கொடியவாலொடுநின்றொரு தோரணந்த னிலுமோடியிறங்கிமெய் தானிமிர்ந்துவடமேருவெனும்படி வடிவா கிச், சாகரம்புடைகுலாவுமிலங்கையு நேர்குலுங்கநிருதேசர்மடிந்து யிர் சாலவுண்டுநமனுர்பசியுங்கெட வெதிர்மோதித், தோளொடும் பெரியவாளொடுதண்டொடு மேறிவந்தகனதேரொடும்விஞ்சிய சூ தொடுமபடைஞரொடும்வளைந்திடு சிலையோடுந், தூவுகின்றமழை போல்விடுமம்பொடு மேழுமந்திரியும்வீழமலைந்திடு தூதனென்றுமி றவாது புரந்தருள் பெருமாளே. (௩௩)

நேரமுற்றுநதிப்புனலாடவும் வாரமுற்றிடுதர்ப்பணமயா வையுநீதியிற்செபநிட்டைதியானமு மகம்யாவு, நீரெடுத்துமலர்த் தொடையேகொடு கோயில்புக்குவழிப்படுசேவையு நேயபத்தியுமுற படுதானமு நெறிமாறு, வீரமிக்ககருத்துடனேவ்ரத மேபிடித்துநட ப்பதுமேலவ ரேணிகட்டியதெத்தனைகோடியு மறியேன்யான், ரா சலட்சணலட்சுமிநாயக வாதிதற்பரலட்சுமணுக்ரச ராமராட்சியென ப்புகழ்வேன்வினை புணரேனே, தோரணத்திடைதத்துநிசாசரர் வா ய்மடித்துமுடித்திறுகாவிரு தோளொடித்துமிடற்பரிதேர்கரி யெழ வீசிச், சோரிகக்கதுரைத்தலைநாடக மாடலுற்றபிணக்குவைமேனரி தோலிறைச்சிகடித்திடவேகமொ டமராடி, யருனைப்பொரவிட்ட னர்நீயெதி ரோவெனப்பொருதக்கணமேசிலை யாண்மைமுற்றுமடக் கிவிடாதுட லளறுக, வாகவத்திடையட்சகுமாரனை மாநிலத்திலரை த்திடுவீரனை யாளுமுத்தமவித்தகவானவர் பெருமாளே. (௩௪)

நாகரீகமுமின்சொலும்விஞ்சிய ரூபரேகையுமுந்துகுணங்க ளும் ஞானபோதமுமிந்த்ரபதந்தனை நிகரான, ஞாலவாழ்வுநிரம்பு பெரும்புகழ் மானமேன்மைகுலம்பொறைபண்புமெய் நாதகீதப்ரபந் தமிகுந்தமிழ் வடநூலென், ருகுமாகலையுந்தவமுங்கிளர் தியாகபோ கமுநன்றியுமன்பும ரோககாயமும்வென்றியுமன்றிய வுடலோடே,

யானபூமிசுமந்துமெலிந்திட நானுமானுடனென்றுதிரிந்தது ஞுண்
மையேநகையிந்தவசங்கத மொழிபாதோ, நாகபாசமெனும்படை
கொண்டொரு மேகநாதனெதிர்ந்துமலைந்திட நாலுநாழிகைசென்ற
பினங்கதுவுறமேலாடும், நாதராவணன்முன்புநடந்தபின் ராமதூ
தனுமூன்குலகணடக ஞனடாவிடுபங்கயமங்கையை யினிநீயுன்,
னேகபோகவிலங்கையுமின்பமு மாயவாழ்வுமுரங்கொள்வரங்களும்
யாவுநீறெழுகின்றனைபொன்றினை மதிகேடா; ராவணாவெனநின்றுவி
ளம்பிய தூதனுமநுமன்பரவும்பத ராமநான்முகனிந்த்ரனமன்றொழு
பெருமாளே. (௩௫)

கடைசிவந்திடுவிழிகள்வஞ்சக வேலோவாளோசேலோகோ
லோ யமதூதோ, கரியகொந்தளமதிசுமந்திடுகாரோபாகோபாலோ
தேனோ மொழிதானென், றிடைநுடங்கமுன்வருமடந்தையர்மே
லேமாலேபூணுவாணாள் கெடலாமோ, வினியிரங்கியுனருணபங்கய
தாளாலாளாய்கேளாய்வாளா விடுவேனோ, முடுகுமிந்திரர்பகைகு
ன்வந்தமராடாவா டாமேலாளேபோ லெதிராடி, முதல்வன்முன்
கொடுவிடுதலுந்தனியேபோயோகோநீயோடாரா வணவீரன், கெ
டநினைந்தனையறிவழிந்தனை வாராயோராய்மாதாவோநீள் சிறை
சேர்வாள், கிளைமுரண்களைவிடுவிடென்றிடுமோர்தூதனோன்வா
ழ்வேவானோர் பெருமாளே. (௩௬)

நாவிலுன்புகழேபடிந்திட நேரேகாரேமாகாயாவே நிகர்கோல
ம், ஞானசிந்தையிலேயமர்ந்திட வாழ்வாராழ்வாரானதேசீர் கவிகூ
றுங், கோயில்சந்ததமேவியன்புசெ யாதேதீதேசேர்வார்சார்வா ய
னைவோருங், கூழையென்றிடநாளுமங்கையர் பாலார்மாலாய்வீணே
நாள்போய் விடலாமோ, பூவின்மங்கையைநாடிமுன்கொடு போயே
தீயென்மேலேமாலே யுளகோபம், போதுமென்றுரையாடிநின்றடி
தாழ்வாயானால்வாழ்வாய்மூடா வெனவீறும், ராவணன்செவிதீகொ
ளுத்திட வேதான்மீள்வோன்வாணாள்வீணா ளறவாழும், ராசபுங்கவ
ராமசந்திர தேவேகோவேவானோரானோர் பெருமாளே. (௩௭)

காலுநீருமனற்புவிவாயுவு மாகியேதசைசுக்கிலம்வார்குடல் கா
ணொணாதுமறைத்திடுதோலினுள் விடுவாசல், காதுமேயொளிர்கட்
புலம்வாயொடு நாசிநீடுசிகழ்த்திருவாயிலு காலுமூழலடிக்கடிநாறி

ட வதுபேணிக், கோலமானசெயற்கையினோடுழல் பாவியேனைமயக்கிவிடாதநு கூலமானக்ருபைக்கணினாலடி யவரோடுங், கூடிவாழ்வுறவைத்துமனோலய சோதிஞானமளித்துனதாகிய கோயில்கோயிலெனப்பெறுபேறினி யருள்வாயே, சோலைசேரமுறிக்கவுநீடிய காவலோரைமுடிக்கவுமானகர் சூறையாடவுமுற்படுதோரண மிசையேறிச், சூழ்பதாதியுழக்கவும்வாளம ரூடுசேனையரைக்கவுமேவல்செய் தூதரானவருக்கடைவோமென விரைசீறி, வாலிலேமுதல்வைத்திடுதீயினை யூரில்வீசியரக்கருமாதரு மாலைதாழவுடைத்துகில்சோர்வுற வுடல்வேக, வாசிதேர்கரிபொட்டெழவாய்விடு மோனதவேலைமுழக்கொலிபோலெழ வானிலேறமுடுக்கியமாருதி பெருமாளே. (௩௮)

அழிந்திடப்பசிகனலெனமுடுகுதல் பெரும்புனற்குறுதபனமொடலம்வர லரும்பயத்தொடுவெகுளியுமுவகையு நரைநோயு, மடங்குறக்கமுமதிசயமிகுதியு மிறந்துபிறப்பதுமுதயமுமரணமு மழுங்குதுக்கமொடுறுசுகம்வருவது முதலாக, மொழிந்தகுற்றமுமறுவகைவிரவிய வுடம்பெடுத்ததிலொருபயனிலையினி முடங்கிவிட்டபினறிவதில்விளைவுகளுளதாமோ, முகுந்தவுத்தமரகுகுலபவசிவ வரங்கசிற்பரசரணெனவருமறைமுழங்குபொற்றிருவடிதொழுமதியினை யருள்வாயே, வழிந்தரக்கர்கடிசைதொறுமிரிதர நெடுங்கடற்பரிமுகமெனவுகமுடி மயங்கமுற்படவருகடையனலென மடவார்தம், மருங்கினிற்றுகிலகல்வதுநினைவர வகங்கைபொத்திமுனிவொடுவெளியெழ மறிந்துபித்திகைகொடிமுடிசுவரடி யொடுவீழ, வெழுந்துசுற்றியபுகைகதுவுறவளர் கொழுந்துபற்றியவடிகனன்முடுகுத லிறந்துமுப்புரமெரியுறுதிறமென வடைவேவெந், தெரிந்துபொட்டெழுமுகடுகள்சிதறிட வொழுங்கரக்கனவொழுகினவழிதர விலங்கைசுட்டதொரநுமனையடிமைகொள் பெருமாளே. (௩௯)

நேரியனெஞ்சுபுச்ச நாபியொடெங்குமுற்றி நேர்பெறுகந்தரத்தி னுடனடி, நீடன்முடங்கலுற்ற ரோமமெழுந்திமைத்து நீடுசுகந்துயர்க்கு வசமாகி, யாரவியந்துகிட்டியாவிவிடுந்தினத்து மாகமிருந்துமிக்க தலைகீறி, யாடியெழுந்துபத்து வாயுவுநின்றாற்ற லானவுடம்பெடுத்த தமையாதோ, வாரியிலங்கையுற்ற வீரரைநெஞ்சிலி

ட்டு வாயிலறைந்துசுற்றி யெதிரோட, வார்சிலையம்புமற்றை யாயு தமும்பறித்து வாதொடுபின்பிடித்து விழமோதித், தேரையறைந் துமற்றை மாவையெறிந்துகறங்கி சேரமுனிந்துவெற்றி யமராடுஞ், சேவகமிண்டனேத்து நீடெரிமண்டவிட்ட தீரனையன்புவைத்த பெருமாளே (சய)

விரகொழிந்துமயலழிந்து மதமடங்கியெனதொடுங்கி வெகுளி பொன்றியிருமையன்றி வளர்காம, மிகமழுங்கிநிலையொழுங்கின் மருவிநின்றுதவமுயன்று வெளியிறந்துதுயிலமர்ந்து தனிமேவி, யுரையுமின்றியுணர்வுமின்றி யுறவயர்ந்துநிறையுமந்த வுருவகன்றபருவமென்று தெளிவேயா, யொளியமைந்தவெளியைநம்பி யிருடிறந்து கரைகடந்த வுணர்வுதங்கியுனையடைந்து விடுவேனோ, நிருதர்தங்களுடல்வெதும்ப விழிபிதுங்கிமிடறுடைந்து நிலைகுலைந்துகுடல்சரிந்து முகம்வேறாய், நெறிமயங்கிமுதுகுவெந்து செவிதுணிந்துமனதுகன்றி நிறையநொந்துருறைபிறந்து களைமூடி, யரைதுமிந்துமுடியிழந்து சதைவழன்றுமயிர்பொசுங்கி யடிமுறிந்துதலைதிறந்து விழவேநின், றடலிலங்கைநகரடங்க யெரிவிருந்துகொளவழங்கு மநுமதுங்கனறியநின்ற பெருமாளே. (சக)

சலமலநின்றுகுமுறுகுரம்பை கிருமிநெளிந்துமுழுகுகிடங்கு தபனமெறிந்ததழலெரிகும்பி யனபானஞ், சளசளவென்றுவிழுமொருவங்கு விதனவரங்குவெகுளிமுழைஞ்சு தருபிணிமண்டுசுமையுறுபண்டி முழுவாயு, குலவியெழுந்துநடமிடுயந்த்ர மிருகைகரம்புவிரவிரிந்த குடிலுடைகும்பம்விழுசுவரெங்கும் வெகுரோகக், குழுவளர்கின்றவடவிதொடர்ந்த விருவினைதொந்தமிகுகுளிர்சிங்கி குலையுமுடம்புநிலையெனவம்பி லுழல்வேனோ, முலையிலணைந்துவிழியிலமுந்தி வளைசெறிசெங்கைதனிலடியுண்டு முகிலளகங்கள்குலையமுயங்கி யிருதாளான், முனியவணங்கியுடலுடனன்றி மிடறுதிறந்துகுரலுமுகந்து முகமதுகொண்டுகுணமதுகண்டு வெயர்வேறக், கலைகளுரிந்துபுளகிதம்ப நலமுழுதுண்டுசுழியில்விழுந்து கவரிதழ்துங்குமமுதையுரிஞ்சி மடவார்மேற், கலவியடைந்தகொழுநரின்மண்டி யனலுமிலங்கையடையவளைந்து கதுவமுனிந்தவநுமன்வணங்கு பெருமாளே. (சஉ)

நாடிநரம்புதசைமூளையென்பு சோரிவழும்புகுடல் கோழைகும்பி நாறுமலங்கள்செவிசேர்குறும்பி சரிபீளை, நாளுமடைந்துகுடியாகிவிஞ்சு தோலின்மறைந்துதெளியாதுநின்று நாறுகுரம்பைதனையேசுமந்து நிலையாய்நின், றேடிமயங்கியிரைதேடிவெம்பி யினைமிருந்ததொழிலேதொடங்கி யூழ்வினைசென்றவழியேநடந்து திரிவேனை, யோகியுணர்ந்துனடியேபணிந்து வாழ்வுறுமன்பர்தமராகுமின்ப யோகமடைந்தபெருஞானமென்று தருவாயே, மாடமிடைந்து மதில்சூழிலங்கை கோயிலடங்கவிடுநீரெழுந்து வாசல்குலைந்துபுகை மூடிவிஞ்சு பொறிமீறி, மாளிகையெங்குமிடுகொடுமண்டி யாரல்விழுந்துகரிசாலைவெந்து மாவுறுபந்திகரியாயிறந்து பலதேருங், கூடவெரிந்துகொடிதூள்பிறந்து மேலிடுகங்குல்வெளியேபரந்து கோபுரநின்றநிலையேசரிந்து மறுகூடே, கூளிநெருங்கநரிபேய்திரண்டு பூதகணங்கள்குடியேறநின்ற கோரணிகண்டவநுமான்வணங்கு பெருமாளே. (௪௩)

பண்கொள்சுருதிதருமேகரா கமஞ்சுகெவுடிநவிறேவராடி பஞ்சுரவகைமிகுசீருலாவு நடபாடை, பஞ்சமலகரிபஹுரநேர்வசந்தமருளுமுடனேதனுசி பந்துயுதயகிரியேமுகாரி சரிராக, மெண்கொள்பெருமைகொலிசோமராக முந்துபயிரவிதனோடுகீத மென்று விளரியுழைதாரமான விசையோடே, யின்சொலடைவுதவறுதுபாடி நம்பவிமலவிராமராம ரங்கவெனவுளுருகாதுவீணி லுழல்வேனே, வண்மைகவிரியமலரோதிதாழ செஞ்சுபுகையவழுமோதைவீற மண்டியுதடுபதறுமுனைக மடவாரு, மைந்தர்குழுவுமுடனேகவீரர் வெந்துகருகியருகாகவோட மந்திரிகளுமிளையோருநீடு புடைசூழக், கண்கள்புகையவனல்போயளாவ வெம்பியுடலமுயிர்வேவடையோடு கன்றவரையிலுடைபோனவாறு மறியாதே, கந்தல்கதுவகிருதேசனோடி யண்டருலகுகுடியேறுமாறு கண்டவநுமனினிதேபரவு பெருமாளே. (௪௪)

நலந்தெரிந்திடுகுரலொடுகைக்கிளை மணந்துழைந்திடுவிளரியுழைத்திற நலயபொருந்தியவிளிபொடுதுத்தமு முறுதார, நவின்ற பண்களொரேழுவகையகொடு பயின்றசெந்தமிழுடைவுபுலப்பட நரம்புதங்கியசுருதிமயக்கற மிகுதாளந், துலங்கவின்பொடுதுதிகளு

ரைத்துனை நினைந்துசந்ததமுருகுகருத்தொடு துவண்டுநின்றிடுசுக மதுபெற்றுள மகிழாதே, துணிந்திடும்பலவுரைகள்பெருக்கியு நினைந்துவஞ்சகர்தமதுகுடிப்பெயர் சுமந்திரந்திடுமவலமொழிப்பது மொருநாளோ, விலங்கைவெந்துகனல பசிகெட்டது கலங்குநெஞ்சொடுநிருதரொளித்தன ரிருந்தசெந்திருவருளினநுக்ரக மதனாலே, யிலங்குசந்தனமிமசலமொத்தழல் குளிர்ந்துவஞ்சர்முனடிமையிலழுத்தன னெழுந்துசென்றினிநமதுகுழுக்களை யடைவேனென், றலங்கலம்புயமயிர்கள்பொடிக்கவு முவந்தசிந்தையொடுடல்புளகிக்கவுமனந்தவண்டர்கணமலரையிறைக்கவு முனிவாறி, யலம்பிறந்திடுமநுமனைநித்தமு மகிழ்ந்துதொண்டுகொள்வரிசிலைவித்தக வரங்கசங்கரர்பிரமர்துதித்திடு பெருமாளே, (௪௫)

தொடையார்செந்தமிழ்மூவகைகருதியு மழியாபஞ்சதிகாரமுமனமொடு துறைசேரும்படியோதியுமுனதடி யுணராதே, சுகமாமங்கையர்மோகனசரிதமு மெனதேயென்பதுமேலிடுநெறியது மொலையாவஞ்சமுமேலாபமும்வெகுளியு முதல்யாவு, மடையாவங்கவபோம்வழிவகைசொலு வினையோர்தங்களினூல்வகைவிரகுகளறியாவென்செயலோவிதுபெருநல மினிநீதா, னருளேகொண்டெனையாளவுமருவவு மெளிதேசந்தயமேனிநீவருமென வநுகூலஞ்சரணாகதியுறுநிலை யருள்வாயே, கொடியேசெந்திருவேமிதுலையில்வரு மயிலேசங்கரனார்பிரமனையருள் குயிலேலங்கையெலாமிகுபொடிசெய்த பொறையாளே, குளிர்வாசங்கமழாயிரமடலவிழ் மலர்மாமண்டபமேவியவதிவித முணைஞானங்களினாலுயர்தவவடி வுடையாளே, மிடல்சேருங்கனல்வாலிடைவருமுன மதிசீதம்படவேயருளியகயல் விழியாய்சிந்தனையாவையுமொழிமொழி யடியேன்முன், வினைமாளும்படிநாயகனொடுகெடி தினியோர்திங்களின்மீள்வதுதிடமென விடையேகொண்டெழுமாருதிதொழவரு பெருமாளே. (௪௬)

முதிர்பொருப்பினிலறையுநெடுந்தறி வெகுசனத்திடைசொருகுசெழுங்கனன் முனையழுக்கியபடையுமருந்துறு நறைசேர்பான், முழுநிலத்திடையெறிவதொர்கந்துக நதியொழுக்கிடைகரையவிடும்புளி முருகுமற்றுளிவிரவுசுகந்தமி வகையேபோன், மதியுரைக்கினுமவமதிவிஞ்சிய வெனதுசித்தமுமுருகிநிரந்தர மதுநிறைத்திடுதுளவொடுகங்கைபு மதலாகின், மலரடித்துணைபரவி வணங்கவு நினைவுப

ற்றவுமதனொடிரண்டற மருவிசிற்கவுமுறுகதியென்றினி தருள்வா
யே, அதிசயப்படவிரவிடைவந்தனை பரிதவிக்குமெனுயிரைவழங்கி
னை யடலரக்கரையொருவன்மலைந்தனை வினைமூதா, ரனல்படுத்தி
னைமுழுதுமுணர்ந்தனை யினியுனக்கெதிரொருவருமிங்கிலை யழிவில்
கற்பமுளளவுமிருந்துபி னநுமானே, விதிபதத்தினைமருவுதியென்
றொரு வரமளித்துநன்மொழிபலவுஞ்சொலி விழிதுளிக்கொளநினை
வொடேகின்றல குடையோனை, விரைவினிற்கொடுவருகநடந்தெனை
நயகுணத்தொடுமுறவொடுமன்பொடு விடைகொடுத்தொருதனியி
லிருந்தவள் பெருமாளே. (௪௭)

நறவினையருந்தலயலோர்புரிந்த தனமதுகவர்ந்தமிருபாவம்வி
ஞ்சு நவைபறவிளங்குமறையோரைமங்க விடுதீமை, நனுகுருநி
ந்தைதனியோகிசிந்தை யெனவிளையுமஞ்சுமகபாதகங்க ளனியிரவிக
ண்டபனிபோலழிந்து விடநாடு, முறுதவமுமன்புமிகுதானபண்பு
நினையிலினியொன்றுமறியேன்விளங்கு மூலகினையளந்தவிருபாதக
ஞ்ச மறவாதே, யொளிபெறுமுகுந்தக்ருபையாளவெங்க ளரிதிருவர
ங்கசெயராமசந்த்ர வுயிரெனவுறைந்தரகுநாதவென்ப தொழியே
னே முறுகுகரிகந்தல்படவேயிலங்கை நகரடையவெந்தவிறகாகவங்
கி மூதல்வனுமடங்கிநிலைநாடவிந்த்ரன் முதலவானோர், முறைமு
றைசொரிந்தமலர்மாரிவந்து வளர்புயமுமந்தநெடுமார்புமம்பொன்
முடியதுநிறைந்துவழியூடுசிந்த மிடலேகொண், டெறிகடல்கடந்த
விசையோடெழும்பி வடதிசைதிரும்புகடல்போல்விளங்கி யிமயகி
ரிமைந்தனெதிரேவிருந்து தருநேர்கண், டிளவரசுகொண்டதிறலோ
னுமெண்கி னதிபதியுமுந்தியெழவானரங்க ளெதிர்கொளநடந்தவநு
மான்வணங்கு பெருமாளே. (௪௮)

தொழுதுபதத்திறைஞ்சி மதுமலரைச்சொரிந்து துதிகளுரை
த்திரங்கி விழிநீரே, துளிகொளநிற்குமன்ப ரடிமலரைப்பணிந்து
தொடுவினையைக்கடந்து பிழையாதே, யழிபொருளிற்புகுந்து மன
துமிளைத்துநொந்து ளறிவொருசற்றுமின்றி வினையேன்மு, னயர்வ
துசெப்பின்முந்த வுனதருளுக்குநின்ற வடிமைபிழைப்பதன்றி யுள
தாமோ, வெழுகவெனத்திரும்பி மருவுகவிக்குலங்க ளிருபுடைசுற்ற
வன்று கடலோதத், திடமதுவிட்டெழுந்து பசியுமிளைப்புமங்க ரவி
மகன்வைப்பிதென்று கருதாமல், வழியின்மறித்துநின்ற ததிமுக

னைத்துரந்து மகபதிபுத்ரன்மைந்த னுடனேநீண், மதுவனமுற்ற
டைந்த வடலநுமப்ரசண்டன் வரவுகூறித்திருந்த பெருமாளே. ( )
எந்தாயென்றுகையேற்பினு நொந்தேனென்றுபல்காட்டினு மிந்தா
வென்றுகொடாக்கொடியவர்மேலே,யெண்சேருங்கவிபாட்டினை வம்
பேபின்றுசொல்வேற்கினி யெங்கேனுஞ்செலுபோக்கிலை யினிநீதா,வ
ந்தாவென்குறைதீர்க்கவு நின்பாதந்தலைசேர்க்கவு நன்றுகுந்துறைகா
ட்டவுமடியார்பா, லண்பாகும்படியாக்கவு மன்பேநெஞ்சிடைதேக்க
வுநன்கூறுங்க்ருபைகூர்க்கும தொருநாளோ,பைந்தார்வென்றியிராக்
கதர் குன்றுகுந்தலைபோய்த்திரள் பந்தாடும்படிவீட்டிய முழுவீர
ன், பண்பாளன்பகைகாட்டிய லங்கேசன்குடிவீட்டொடு பண்டார
ங்கனன்மூட்டிய வொருதூதன் கந்தாலங்க்ருதமாத்துள பஞ்சூ ம்
புருடோத்தம கம்பீரங்கொள்பராக்ரம ரகுவீரா, கண்டேனெம்பெ
ருமாட்டியை யென்றேநின்றுகைகூப்புதல் கண்டேதென்றிசைநோ
க்கிய பெருமாளே.

(௫௰)

பனிதானொத்தேயோனிமுகங்கொடு தினையாகிப்பெறுதுதிர
ண்டொரு பயறுகிச்சூலாகியொர்கந்துக மளவாகப், பனையாகிக்கா
ளாகிமருங்கொடு வபிறுகித்தோண்மார்பொடுசந்துகள் பலவாகப்
போய்வாயொடுகண்செவி நுதலாகிச், செனிபாகித்தோலோடுதிரங்
குட லுடல்பூரித்தேயூ நிபெயர்ந்திடு சினைதான்முற்றுமாதமொரொ
ன்பது கடவாமேற் றிருமாவுற்றேபூமிகதஞ்செய்து மகவாகித்தாய்
பால்முலையுண்டமு சிறைபாகிப்பாழாகியவென்குறை களையாயோ,
விளையார்நெட்டேர்மீதொருபைம்பொழி லிடையேபொற்பூமாதுறை
கின்றதும் விடமேபொரப்பார்கரவன்மடந்தையர் குணம்யாவும், வி
ழிநீர்விட்டேவாடிமெலிந்தது மிளையான்முற்றேர்சாலையடர்ந்ததும்
விரலாழிக்கேதூதுதெளிந்தது மறைநேரு, மனையாள்கற்பால்வீறு
புனைந்தது முயிர்தானொத்தேவீடணன்மென்கொடி யநுகூலத்தா
லாருயிர்நின்றது மொழிபாதே, யநுமானைக்கேளாநனியங்கவன் ம
னமாசற்றேதேறவழங்கிய வடையாளச்சூடாமணிகண்டருள் பெ
ருமாளே.

(௫௧)

அளித்திடுகோலமொன்றுமற்று முதற்றருகோலமொன்றுமு
ற்று மழித்திடுகோலமொன்றுமற்று மொருகோல, மருத்திசெய்தாலு
முன்புவைத்து நறைப்புகைதீபமின்றுபத்தி யருச்சனையாலிறைஞ்சி

நற்கை தொழுதாலு, முளத்தினிலெயுகந்திருத்தி கினைத்தழுதாலும நிகிதத்தை யுடற்கொடுநாடொறுந்துதித்து மறுகேள்வி, யொழித்தல்செய்தாலுமெங்குமுற்று வெளிப்படவேபுரந்தளிக்கை யுனக்கலவோகடன்பிறர்க்கு முடியாதே, வளப்படுதூதனென்றுரைத்த வுரைப்படிதானெழுந்துவெற்றி வரைத்திரடோளொடங்கிருப்ப மயனூர்தம், மடக்கொடிதோள்வலந்துடிக்க வரக்கனதோளுடன்சிறைக்குண் மலர்க்கொடிதோளிடந்துடிக்க நெடிதாகிக், களிப்புடனேயறந்தழைக்க வடுத்திமையோர்வணங்கவுச்சி கனத்தொருசேடனும்பிரமிக்க வருசேனைக், கவிக்கடல்சூழவின்பமிக்க வருட்கடல்போலவங்கமெற்று கடற்கரைமீதுவந்திறுத்த பெருமாளே. (ரு௨)

சுந்தரகாண்டம் முற்றிற்று

---


| | |
|---|---|
| பாயிரம் (திருவிருத்தம்.) | ௩ |
| பாலகாண்டம். | ருரு |
| அயோத்தியா காண்டம். | கரு |
| ஆரணிய காண்டம். | ௬௪ |
| கிட்கிந்தா காண்டம். | ௩௭ |
| சுந்தர காண்டம். | ரு௨ |
| ஆகத்திருவிருத்தம். | உ௱௬ |


ஸ்ரீராமதாஸர் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் தேசிகர் திருவடிகளே சரணம்.